[illegible]

மலர் 3: இதழ் 1. ஜன. 1930

JL
Y592 bvm21,N x.V.N.
N30. 3.1.
2 20502

2 5 JUN 1930

உ

சிவமயம்

# வேளாள மித்திரன்.

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 3 } சுக்கில-ஸு சித்திரை-மீ 1930-ஸு மே-மீ. { இதழ் 1

## மித்திரன் 3-வது ஆண்டு.

பரமன் கிருபையால் மித்திரனுக்கு இரண்டாண்டுகள் பூர்த்தியாகி பிரமோதூத ஸு சித்திரை மாதம் முதற்கொண்டு மூன்றாமாண்டு துவங்குகிறது. கழிந்த ஈராண்டுகளிலும் மித்திரனுக்குற்ற இடையூறுகள் பல. பல அன்பர்கள் சந்தா செலுத்தாமையால் நேர்ந்த வறுமை ஒருபுறம்; அனுமதி பெற்றனுப்பியும் வி.பியைத் திருப்பியதால் உண்டான விரயம் மற்றொருபால். 11-12 வது இதழ்கள் மிக மெலிந்த-குறுகிய வடிவுடன் வெளிவந்ததொன்றே இப்பொருள் முடையை உதகரிக்கும். ஆங்காங்கு சிதருண்டு கிடப்பினும் கடப்போனுக்கு வழிகாட்டும் நடுநிசியின் நக்ஷத்திரங்கள் போல, பல அன்பர்கள் மித்திரனுக்கு அமைத்தொண்டாற்றி வந்தனர். அன்னார்க்கெம் அனந்த வந்தனம் உரியதாகும். இவர்வழி மித்திரனது நிலையுணர்ந்த பலர் சோர்வில்லாதுழைக்கத் தமது ஆதரவு தருவதாக வாக்களித்துள்ளார்கள். இவராசிகளால் மித்திரன் புத்துயிர் பெற்று உருவிலும் நலத்திலும் சிறந்தோங்குவானென்று நாம் பெரிதும் நம்பியுள்ளோம். 'தனக்கு மிஞ்சி தான' மென்பதை உணர்ந்த நமது குலாபிமானிகள், தமது சமூகச் சஞ்சிகையின் மேம்பாட்டினுக்குழைத்தல் அவசிய மென வற்புறுத்துகிறோம்.

"தெய்வம் மானுஷ்ய ரூபாணாம்" என்பதால் மானிடவுருவந்தாங்கியுள்ள கடவுளர்...மித்திரனை ஆசிர்வதித்து வைக்குமாறு பெரிதும் விழைகிறோம்.

ஆசிரியர்.

# கண்ணம்மா—என் காதலி யோகம்.

பாயு மொளி நீ யெனக்கு—பார்க்கும் விழி நானுனக்கு
தோயு மது நீ யெனக்கு—தும்பியடி நானுனக்கு
வாயுரைக்க வருகுதில்லை—வாழிநின்றன் மேன்மையெல்லாம்
தூய சுடர் வானொளியே—சூறையமுதே கண்ணம்மா !

வீணையடி நீ யெனக்கு—மேவும் விரல் நானுனக்கு
பூணும் வட நீ யெனக்கு—புது வயிர நானுனக்கு
காணுமிடந் தோறு நின்றன்—கண்ணி னொளி வீசுதடீ
மாணுடைய பேரரசே—வாழ்வு நிலையே ! கண்ணம்மா

வான மழை நீ யெனக்கு—வண்ண மயில் நானுனக்கு
பான மடி நீ யெனக்கு—பண்ட மடி நானுனக்கு
ஞான வொளி வீசுதடி—நங்கை நின்றன் சோதிமுகம்
ஊன மறு நல்லழகே—ஊறு சுவையே ! கண்ணம்மா

வெண்ணிலவு நீ யெனக்கு—மேவு கடல் நானுனக்கு
பண்ணு சுதி நீ யெனக்கு—பாட்டினிமை நானுனக்கு
எண்ணி யெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமில்லை—நின் சுவைக்கே
கண்ணின் மணி போன்றவளே—கட்டியமுதே கண்ணம்மா !

வீசுகமழ் நீ யெனக்கு—விரியு மலர் நானுனக்கு
பேசுபொருள் நீ யெனக்கு—பேணு மொழி நானுனக்கு
நேசமுள்ள வான் சுடரே! நின்னழகை யேதுரைப்பேன்!
ஆசை மதுவே! கனியே! அள்ளுசுவையே! கண்ணம்மா

காதலடி நீ யெனக்கு—காந்தமடி நானுனக்கு
வேதமடி நீ யெனக்கு—வித்தையடி நானுனக்கு
போதமுற்ற போதினிலே— பொங்கிவருந் தீஞ்சுவையே
நாதவடி வானவளே, நல்லவுயிரே! கண்ணம்மா [—பாரதியார்.]

# பஞ்ச யக்ன உண்மை.

(க. கந்தசாமித் தேவர், மேட்டுப்பாளையம்.)

காலமாற்றம், கல்விக் குறைவு, "கற்றோர் சுயநலம்" ஆகியவற்றால் [illegible] சக்கிடமான இந்த சமயக் கோட்பாடுகள் பல [illegible] அவற்றுள் "பஞ்ச யக்னம்" என்பதுமொன்று. இதனை

22052



சிவன், விஷ்ணு, அம்பிகை, கணேஷன், சூர்யன் ஆகிய ஐவகை மூர்த்திகளை விக்ர ரூபமாக வைத்து ஆராதித்து வழிபடுதலென்பர் சிலர். மற்றுஞ் சிலர்:—பிரம்ம யக்னம் (வேத போதுதல்), பிதுர் யக்னம் (இறந்தோரை பிண்ட தருப்பணங்களால் மகிழ்வித்தல்) 3. தேவ யக்னம் (அக்னியில் ஓமம் செய்தல்), 4. பூதயக்னம் (பலி யாதிகளால் பூதங்களை திருப்தி செய்தல்) 5. மானுட யக்னம் (அதிதி ஆராதனை) என மொழிவர்.

இவற்றுள் விக்ர ஆராதனையைக் குறித்துச் சாதக பாதகமான கூற்றுக்களுண்டு, பிரம்ம, மானுட யக்னங்களைத் தவிர்ந்து பிதுர், தேவ பூதமாகிய சூக்கும சரீரிகளை ஸ்தூல ரூபமான பிண்டபலிகளால் மகிழ்வித்தல் எப்படி ? என்பது பற்றி பெருவாதங்கள் இன்னும் நிலவுகின்றன.

எனவே, சந்தேக வாதங்களுக்கு இடந்தாராத—காலத்திற் கேற்ற மக்கள் அனைவரும் அவசியம் செய்யவேண்டிய "பஞ்ச யக்னம்" ஏதேனு முண்டா ? உண்டெனின் அதற்குறிய கடவுளர் யார் ? அவரெங்ஙனம் வணக்கத்திற்கு உறியார் ? என்பதை யீண்டு காண்போம். பிறர் நமக்குச் செய்த நன்றியை மறவாமல் அவரகங் குளிர நம்மாலாய தொண்டு செய்வதே யக்னம் என்ற பதத்தின் அருத்தமாகும். இப்பொருள் கொண்டு நோக்கின் நமது இன்றைய நிலைமைக்குச் சமீப காரணராய்விளங்கி நமது வணக்க ஊழியத்தைப் பெறவுரிமை யுள்ளவர் பலருள் ஐவர் தலையாயவர். அவருள் முதற் பெருந் தெய்வம் நமது,

## அன்னை.

புருஷார்த்தங்கள் நான்கினையுமுடைய சாதனமாயுள்ளது உடல். இத்தகைய அருஞ் சாதனமான உடலைத் தோற்றுவித்து வளர்த்த முன்னறி தெய்வமிவள என்பதை எவரே மறுப்பர் ? சுருக்கின் நமக்கிச் சதுர் தர்ம சாதனமாய் உடலைத் தர

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்தே
அந்திபகலாகச் சிவனை யாதரித்து—தொந்தி
சரிய சுமந்து" பெற்றவள் இவள். ஐயிரண்டு திங்கள் தாங்கி "ஓராம் மாதம் உடலது தளர்ந்து" என்ற பெரும் அல்லலுற்றது போதாமல், பிரசவ வேதனையில் மரணவஸ்தை யுற்று, நொருங்கிய ரத்த வாவியில் பிணம் போல உணர்ச்சியற்றுக் கிடந்த நிலையினும் பிறர் தமக்குள் இவள் பெற்றது

பைய லென்றபோதே பரிந்தெடுத்துச்——செய்யவிரு

கைப் புறத்தி லேந்திக் கனகமுலை தந்தவாறு தன்நோய் மறந்து நம்மை நோக்கி நோக்கி மகிழ்ந்தவள். நம்மை அரைக் கணமுங் கீழிட மனமில்லாமல் "அந்தி பகல் கையிலே கொண்டெம்மைக் காப்பாற்றி"னவள். கிடத்திச் செல்ல வேண்டிய கடமைவசியம் நேர்ந்த போதும் அதி மிருதுவான அழகிய

வட்டிலினுந் தொட்டிலினு மார்மேலுந் தோண்மேலும்
கட்டிலினும் வைத்தென்னைக் காதலித்து——முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிச்" சென்றவள். நமது

மல ஜலங்களை யெல்லாம் அருவருப்பு சிறிதேனு மின்றி அடிக்கடி தன் கையால் வழித்தெறிந்து, நம்மை நீராட்டித் தூபமிட்டு மெள்ளத் தன்

முகம் மேன் முகம் வைத்து முத்தாடி யென்றன்
தேனே யமிர்தமே செல்வத் திரவியப் பூ
மானே" எனக் கொஞ்சியவள். நம் நோய்க்குத் தான் மருந்துண்டு பத்திய மிருந்தவள். தான் விரதங் கிடந்து நமக்கு விருந்தூட்டியவள். தன்னாபரணங்களை யெல்லாம் புதுக்கி நமக்கு "அரை மணிகள் கட்டிச் சதங்கையிட" நாம் அழகு பெறு நடையுடன் இறுதபடி மொழி பயிலக் கேட்டு ஆனந்தித்து

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா—பேசும் பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே—என் முன்னே—ஆடி வருந்தேனே!
ஓடி வருகையிலே—கண்ணம்மா—உள்ளங் குளிருதடீ
ஆடித் திரிதல் கண்டால்—உன்னைப்போய்—ஆவி தழுவுதடீ
சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா—செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே—உலகில் ஏற்றம் புரிய வந்தாய்.

என மெய் மறந்து பாடி, வாரியெடுத் தணைத்து உச்சி மோர்ந்து பித்தடைந்தவள். இரவில் நெடு நேரங் கண் விழித்து நறுங் கீதம் பாடி நம்மை கண்வளரச் செய்தவள். பெறுநாளிலும், வளர்க்குமாண்டுகளிலும், நோய்க் காலத்தும் இவ்வன்னை நமக்காக பட்ட பாடினை எம்மனத்தால் நினைப்பது? எச் சொல்லில் வருணிப்பது? குழந்தைப் பருவத்தே யன்றி சிறுவன், வாலிபன், காதலன், தந்தை, முதியன் என்ற பிற நம் பருவத்தும் இவள் ஆற்றிய பெருந் தொண்டினுக் கெல்லை யுண்டோ உண்டோ? தெய்வ மென நம்மைப் போற்றிப் பேணிய தாயினும் ஏது கண் கண்ட கடவுள்?



## தந்தை.

கருத்தாங்கல், ஈன்றெடுத்தல் ஒழிந்த பிறகாரியங்களி லெல்லாம் அன்னையை யொப்பவன் அப்பன். அகத்திருந்து அம்மை நமதுடல் வளர்க்கப் புறத்தோடி பொருளீட்டி யளித்தவன் தந்தை. நமக்காகத் தன் "பசிநோக்காது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது நம்மைப் பேணுத லொன்றே தங்கருமமாகக் கொண்டவர். பிறர் தமக்களிக்கும் தின்பண்டங்களையும் உண்ணாது முடிந்து வந்து நமக்கூட்டி தான் களித்தவர். கிழிந்தனவும் பழையனவும் தாமணிந்து புதியனவும் நல்லனவும் நமக்குப் பூட்டியவர். பொருள் தேடும் புறவுலகில் வதங்கி வீடு திரும்பியதும் நம்மைக் கண்டு மதிகண்ட கடலென உள்ளம் பூரித்தவர். வறுமையால் எத்துன்ப முற்ற போதும் பெருமையாக

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்று
என்னுடைய ரேனும் இடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்". என நம்மை மெச்சியுகந்தவர். சங்கீத முதலிய இன்னிசை கேட்டு மகிழ காலப்பொருள் வசதிகள் இல்லாத சமயத்தும்—அவற்றைப் புறக்கணித்தும் நமது பொருளோசையற்ற புன்மொழியைக் குழலினும் யாழினும் இனியவாகக் கேட்டு, மார்பிலேற்றி "மக்கள் மெய்தீண்டல் இன்பம்" என நனி மகிழ்ந்தவர். பிற்காலத்து எவரேனும்

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்——சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்" என நம்மைச் சுட்டி நகையாடுவாரெனத் தானஞ்சியும்,

"துள்ளித் திரிகின்ற காலத்திலென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே" என நாம் நோகாவாறும், தக்க இளமைப் பருவத்தில் நம்மை பள்ளியிலமர்த்தி இம்மையும் அம்மையும் தரவல்ல கல்விபெற வகுத்தவர். அதற்காக நேரும் பெருஞ்செல்வமனைத்தும் முனுக்காது கொடுத்தவர். பயமறியா இளங்கன்றைப் போல நாம் துள்ளித் தாவி தீ நெறியில் புகும்போது, அறத்தாற்றும், மருத்துவனைப் போல நம்மை ஒறுத்து நல்வழியிற் புகுத்தியவர். நம்மைச் சான்றோனாக்க தந்தையின் கட

னெல்லாம் அன்புடன் செய்தவர். உலக நிலையிலும் நம்மை உயர்த்து வான் வேண்டி சிறு பொருளேனும் சேமித்து வைக்கப் பெரும்பாடு பட்டவர். யோசிக்குமிடத்து.

மண்ணி னன்னை தந்தை மறமறஞ் செயினும் நோன்பு
பண்ணினு முடல் வருந்தப் பணிபுரியினு மருந்தொன்று
உண்ணினுங் களிக்கினுந் துன்புற்றயரினும் மனத்தொன்று
எண்ணினுந் தம்பொருட்டன்றியின் சுதர்பொருட்டலன்றோ?

இவையனைத்துங் கருதியே

சின்னவோர் பொருள் தந்தோரை சீவனுள்ளளவு முள்ளத்து
உன்னவே வேண்டுமென்ன வுரைத்தனர் பெரியோர்; தேசந்
தன்னை, யாருயிரைச், சீரார் தரணியின் வாழ்வைத், தந்த
அன்னை தந்தையர்க்குச் செய்யுமருங் கைம்மாறுளதோ வையா!

எப்புவிகளும் புரக்கு மீசனைத் துதிக்கவேண்டின்
அப்பனே ஆயே என்போம் அவரையே துதிக்க வேண்டில்
ஒப்பனை யுளதோ வேலையுலகில் கட்புலனில தோன்றுஞ்
செப்பருந் தெய்வ மன்னார் சேவடி போற்றாய் நெஞ்சே!

என வெகு அழகாக நவின்றார் நீதிநாலவர். இதனையே "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென" கூறுகிறது. எனவே இவ்விருவர்தான் நமது வழிபாட்டிற்குரிய முதற்கடவுளர். தந்தைதாய்ப் பேணலுமே நமது முதற் தொண்டாகும் யக்னம்.

குரு.

உடல் வளர்த்த தாய்தந்தையரைப் போல நமது அறிவை வளர்க்க முயன்றவர் இவர். பூண்வேய்ந்த பிணம், முகத்திலிரண்டு புண்ணுடையான், அறிவிலி, தற்குறிமுண்டம், என்ற வசைப்பட்டம் நமக்கு நேராவாறு முதன் முதலில் ஹரி ஓம் என அக்ஷராப்பியாசம் செய்வித்தவர். எண்ணும் எழுத்துமாகிய கண்களைத் தந்து நமதறிவை விசாலித்தவர். எனக்கு ரம்மியமான சிநேகர் பலருண்டு. அவரெல்லாம் பருவமுமுடையவர். உலகின் பல பகுதிகளுக்கும் சேர்ந்தவர். மந்திராலோசனை சபையிலும் போர்க்களத்தும் சாஸ்திரீய அறிவிலும் தமது குற்ற ஏற்றத்தால் உயர்பட்டங்கள் பல பெற்று உலகினரால் பெரிதும் கௌரவிக்கப்பட்டவர். அவர்களை அடைதலும் மிகசுலபம். நினைத்தால் என்னுடன் வந்து குலவுவார். வேண்டாமெனின் போய் விடுவார். கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் தகுந்த பதிலை உடனே தருவதன்றி எனக்கு எத்துன்பமும் தரார். பழங் காலத்து நிகழ்ச்சி



களை விரிப்பார் சிலர். மற்றுஞ்சிலர் இயற்கையின் அதி ஆச்சரிய உண்மைகளை எடுத்து உதகரிப்பார். ஒரு சாரார் பிழைக்கும் வழி அறிவுறுத்துவார். பலர் இறைக்கும் வழி காட்டுவர். என்னுடைய கவலைகளையெல்லாம் கணத்தி லோட்டி பேரின்பம் தருவார் பலர். சில்லோர் எனக்கு மனத்திடனைத் தந்து ஆசைகளை அடக்கி யாளும் அரு மார்க்கத்தைக் காட்டி, தன்நம்பிக்கையை வளர்ப்பர். சுருங்கச் சொல்லுமிடத்து உலகிலுள்ள சகல கலா சாஸ்திர ஞானக் கோட்டைகளின் பெரு வாயில்களையுந் திறந்து என்னைப் புகுந்து அனுபவிக்கத் தூண்டுகிறார்கள். அவர்கள் கூறும் அனுபவ உபதேசங்கள் என்னை எத்துன்பத்தும் காக்க வல்லன. இதற்கெல்லாம் கைம்மாறாக அவர்கள் கேட்பது அமைதியாய் கிடைக்க என்னிலத்தின் சுத்தமான ஓர் பகுதியே. எனெனில் ஜனக் குழப்பத்தைவிட நான் தனித்திருந்து இளைப்பாறும் அமைதிக் காலத்திலேயே எனக்கு பேரின்பமீய இவர்கள் விரும்புகிறார்கள்" என்னும் அதி உத்தம அன்பராகிய புத்தகங்களோடு குலவிக் குலவி இன்பந் துய்க்க வழி கோரியவர் நமது ஆசானன்றோ? இவ்வெழுத்தறிவித்த இறைவன் நமக்கு நல்கிய செல்வமே. வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது; வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது, கள்ளர்க்கே மிகவரிது; காவலோ மிகஎளிது" ஆகிய அருங்குண முடையது. அம்மம்மா! இவ்வற்றாம் பெருஞ் செல்வ மீந்த அசானை எந்நாவால் புகழ்வது? உன்னுமிடத்து இம்மித்திரனை வாசிக்கவும், பல்லோர் நிழலிலிருந்து ஊதியம் பெறவும் செய்தவன் குருவல்லவோ. நாம் இவருக்குச் செய்யும் பணிவிடையே மூன்றாவது யக்னமாகும்.

அதிதி.

கள்ளார், கள்ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்---தள்ளியும்
வாயிற் பொய்கூறார் வடுவறு காட்சியார்

சாயிற் பரிவதிலர் ஆகிய நற்குணக் களஞ்சியமாய், விருப்பு வெறுப்பற்று, சிறிதேனும் நாளைக்கு வேண்டுமென்ற சிந்தை யில்லாராய், செல்லுமிடந்தோறும் மக்கட்கு

சபயம் வரினிடித்துரைப்பார் தக்கவழிச் செலச் செய்வார்
இமையவர்த மூலகுறவு மிருளுலகம் பகையுமாய்

அமையவறி வுறுத்துவார்' அதிதிகளாவார். மனைவாழ்க்கையி லீடுபட்டு மதிமயங்கியவர்க்கு இவர் போதங்கள் அவசியம் வேண்டற்பாலது. எனவே இத்தகைய துறவிகளுக்கும் கல்வி கற்க விழையும் மாணவருக்கும் தம்மாலாய உண்டி உடை முதலியவைகளை உதவி, நலம் பெறுதல் யதிதி யக்னமாகும்.

## தம்பதிகள்.

இரண்டுடலும் ஓருயிருமாய் தம்பதிகள் ஒருவர் மற்றொருவர் மேம்பாட்டினுக்குச் செய்யும் ஊழியத் தியாகங்களும் அளவிடற்கு அரியன. மனைவியோ நமது பருவ காலத்திற்கோர் ஆறுதலாய் தனது தாய் தந்தை சோதரர் உறவினர் முதலிய அனைவரையும் நீத்து நம்மை மகிழ்விக்க வந்தவள். இயன்ற அளவு நம்பால்

அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப்
பொன்னி யழகும் புவிப் பொறையும்——வன்ன முலை
வேசி துயிலும் விறன் மந்திரி மதியுங் கொண்டு, நமது இன்ப

நிலைக்காக உழைப்பவள். “[illegible]ட்டற்ற போழ்தின் முடுகித்தன் னுயிரை நட்டான் ஒருவன் கை நீட்டும்” உத்தம நண்பனைப் போல நமதாபத்துக் காலத்தில் தன்னுயிரையும் விடச் சித்தமாயிருப்பவள். தேய்வுறித் தேய்ந்து சிறப்புறிச் சிறக்கும் சந்திரனின் களங்கம் போல நாம்

“துன்ப மெய்திடிற் றுழுமத் துன்புறல்
இன்ப முற்றிடி லின்புற் றிருத்தலே
மன் பெருந்” தவமாக உடையவள். தன்னருந்
தாதை தன்னினுந் தன்னையர் தம்மினும்
மாதர் மென் மொழி மைந்தர் கடம்மினும்

“நம்பால் காதல் மிகுதியாகக் கொண்டு, நமதில்லறத்தை நல்லறமாக்க இயைவன செய்து, அடிசிற் கினியளாய், அன்புடையாளாய், படி சொற் தவராத பான்மையளாய் அடிவருடி பின் தூங்கி முன்னெழுந்து நமக்கும் நமக்குரியாருக்கும் மகிழ்வுடன் பணி செய்பவள். நாம் களிக்கத் தான் அலங்கரித்தும் “பிரியுங் காலையிற் பெய் கலன் யாவையு மொருவி மாசுடனுண்டிட வைகி” நமது வரவும் நலமுங் கருதி தவங்கிடப்பவள். சுருக்கின் நம்மை முழு மனிதனாக்கி, இல்லறத்தா னென்று பிறர் மதிக்கச் செய்து, நமது குலஞ் சிறக்க நன் மக்களை உதவி, நமக்கு இம்மை யின்பத்தை யூட்டி, மறுமைக்கும் நன்னிலை கூட்டுபவள். நாம் செய்யுங் காரியங்களிலெல்லாம் உறுதுணையாக



நின்று வெற்றி பெறச் செய்பவள். இவள் நமக்குச் செய்யும் பேருதவிகளை நினைந்தே,

அனை தந்தை யில்லத்தும் சுகமில்லை நமக்குரிய ளானபின்னர்
மனைதாங்கல் சூழகஞ் சூல் சேய் பெறுதல் வளர்த்தெடுத்தலொடு
மாமன் மாமி
இளையவரை யுபசரித்தல் விருந்தோம்பல் நம் ணிகளியற்றலென்னும்
வினைகளினை யயர் மனைவியைப் பரிவுட னாதரவு செய்ய வேண்டு
நெஞ்சே”;

என்றனர். தாய்க்குப் பின் தாரம் என்பது கொண்டே இவர் நமக்குச் செய்யும் பேருதவியை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். இவ்வாறு தன்னுடல் பொருளாவி மூன்றையும் நமக்கர்ப்பித்து உழைக்கும் மனைவி நமது காப்பிற்கு உரியளல்லவோ? இவளில்லை யெனில் நமக்கு இன்பமேது? இல்லறப் பெருமையேது? சந்ததியேது? தாய் தந்தை குரு அதிதிகளுக்கு கடனாற்றுவ தெங்கே? மனைவியைப் போஷித்தல் மிக அவசியம் என்பதை உணர்த்தவே “எந்த வீட்டில் பெண்கள் பூஷணை முதலியவற்றால் திருப்தியடைந் திருக்கிறார்களோ அந்த வீட்டில் எல்லாத் தெய்வங்களும் சந்தோஷத்தோடு வசிக்கின்றனர். எவ்வில்லத்தில் அவர் எவ்வாறு பூசிக்கப்பட்ட வில்லையோ அவ்வீட்டில் செய்யும் காரியங்களனைத்தும் பயனில்லாது போய்விடுகின்றன” என மனுதர்மத்தின் 2 வது அத்தியாயத்தின் 56 சுலோகம் வற்புறுத்துகிறது.

புருஷன் மனைவிக்குச் செய்யும் பேருதவியை விரிக்க வேண்டுவதில்லை. தன்வாழ்க்கைத் துணைவியின் நலத்திற்காகவே இவன் உயிர் வாழ்கிறான் என்று சுருங்கக் கூறிவிடலாம். மனைவி, அவள் பெறும் மக்கள் முதலியவரின் உண்டி, உடை, ஆபரணம் முதலியவற்று இறுதிவரை உழைத்தே தன்னாருயிரையும் விடுகிறான். இத்தகைய கொழுநனைத் தெய்வமெனப் பேணி உழைத்தலன்றோ நன்றியறிதலுள்ள மனைவியின் முதற்கடன். இவ்வாறு புருடன் மனைவிக்கும் மனைவி புருடனுக்கும் செய்ய வேண்டிய கடமையே தம்பதியக்னமாகும். இதைத் தான் உண்மை யக்ன மென தயானந்தரும் தமது நூலில் கூறியுள்ளார்: அது வருமாறு. பஞ்சயக்னம் ஐம்பெருங் கடவுளரைப் பூசித்த லென்பது மிக அழகிய பொருள் கொண்டது. ஆனால் சுயநல மிகள் அதன் பொருளைத் திரித்து பாழ்படுத்திவிட்டார்கள். வேதங்க

ளால் விதிக்கப்பட்ட யக்னம் நமது வணக்கத்திற்குரிய உயிர்க்கடவுளர் ஐவரை பூசிக்கவேண்டு மென்பதே. முதற்கடவுள் அன்னை. தாய் சந்தோஷமாயிருக்க அவருடைய ஆண் பெண் மக்கள் அனைவரும் முழுமனதோடு பாடுபட வேண்டியது முதற் கடமை. அவளைக் கொடுமையாக நடத்தக்கூடாது இரண்டாவது கடவுள் தந்தை. இத்தெய்வமும் தாயரைப் போலவே நடத்தப் பட வேண்டும். 3 வது கடவுள் நமக்கு அறிவூட்டிய ஆசான். இவரை பூரணபக்தியோடு வழிபட வேண்டும். 4 வது கடவுள் நிறைந்த கல்வி, தெய்வ பக்தி, ஒழுக்கம், நேர்மை, சகலரும் உஜ்ஜீவிக்க வேண்டு மென்ற கருத்துடன் ஊர்கள் தோறும் சுற்றித்திரிந்து மக்களுக்கு உண்மையைப் போதித்து நல்வழிப்படுத்தும் அதிதி. 5வது கடவுள் கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனுமாவர். ஏனெனில் இவ்வுயிர்க் கடவுளர் தான் ஒருவன் பிறப்பிற்கும் வளர்ப்பிற்கும் காரணமாவர். இவர்கள் மூலமாகத்தான் மனிதன் உண்மை ஞானத்தையும், நல்ல குணத்தையும், சீரிய வாழ்க்கையையும் பெறுகிறான். இவருக்குச்செய்யும் பணிவிடையே ஒருவனை கடவுளிடத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியது" என்கிறார். இதுவே இக்காலத்திற்கும் பொருந்தியதாகக் காண்கிறது. முதன்முதலில் இவ் உயிர்க்கடவுளருக்கு நமது கடமையைச் செய்ய வேண்டும். பிறகு காலமிருந்தால், பிரகாண கடவுளர்க்கும் பூசனை செய்யலாம். இதனை விடுத்து உண்மையில் மாதா வயிறெரிய மகேஸ்வர பூசை செய்யும் உத்தமரெத்தனை பேர் இன்று நம்மிடையில்லை? உயிருள்ளபோது ஒரு கவளமுமீயாது இறந்தபின் தாய் தந்தையர்க்கு படோடோபமான சிராத்தஞ் (பிதுர்யக்னம்) செய்யும் பெரியாரை நாம் கண்டதில்லையா? கேட்டதில்லையா? என்னே இவர் அறிவு! பிரத்தியக்ஷமாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் இக்கடவுளரைப் பேணாமல் பெயருருவமில்லாத பெம்மானை போற்றுதல் எப்படி கை கூடும். ஒருவேளை இக்காணுங்கடவுளர் நமது பூசனையை ஏற்றுக் கொண்டால் நாம் கஷ்டப்பட நேரிடுமென அஞ்சியோ இதனை இன்று விட்டுவிட்டு, காணாக் கடவுளர் பெயரால் நாம் உடல் கொழுக்கத் துணிந்துள்ளோம்? இழிவு. இழிவு.

தாய் சொற் றுறந்தால் வாசகமில்லை; தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பதையேனு முணர்ந்து நன்றியறிதலுடன் இக்காணும் கடவுளர்க்கு நம்பணி செய்மின், போற்றுமின், தொழுமின். இவ



ராசிகள் அவனருளையும் பெறச் செய்தல் திண்ணம். காலத்திற்குரிய பஞ்ச யக்னமிது.

வைத்தவ ருளமுவப்ப மலர்நிழல் கனியியாத
அத்தருத் தன்னைவெட்டி யழலிடு மாபோ லின்று
கைத்தலத் தேந்திகாத்த காதற்றாய் பிதாவை யோப்பா
பித்தரை யத்தன் கொன்று பெருநர கிடில் சேர்ப்பானே!

என்பது முக்காலு முண்மை, உண்மை.

# நச்சுப் பொய்கை.

## II

### தேயிலைப் பானம்.

டாக்டர் D. ஸ்ரீனிவாசன் A. B., (All Ind)
A. M. A. C., (Mad),

நவீன இந்தியரின் நாட்டத்தை மாலைப் பொழுதில் கவர்வது 'டீ' என்னும் தேத்தண்ணீர்.

1664-ல் இங்கிலாந்து தேசத்தை ஆண்டு வந்த இரண்டாவது சார்லஸ் என்னும் அரசர் பிரானுக்கு முதன் முதலில் கிழக்கிந்திய வியாபாரக் கூட்டத்தார் 2 பவுண்ட் 2 அவுன்ஸ் தேயிலையை பரிசாக அனுப்பினார்களாம். அதனை அவ்வரசனின் மனைவி அன்புடன் வரவேற்றுபசரிக்க, அது பொது மக்களிடத்தும் நுழைந்தது. இதன் காரணமாக இன்றைக்கு உலகில் 3ல் 1 பகுதியினர் டீக்குடியர்களாயினர்.

இக்குடியானது தென்னாட்டைவிட வட நாட்டில் அதிகம். இதை தென்னாட்டிலும் பரப்ப வேண்டுமென ஒரு சில டீக்கூட்டத்தார் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வருகின்றனர். வாழ்க்கை நிலையின் பலதிறப்பட்ட பொது மக்கள் பெரும்பாலும் ஒருங்கு சேரப்பெறும் பொது விடங்களே விளம்பரத்திற் கேற்ற இடமென்னும் வாணிப முறையினைப் பற்றி பொதுக்கூட்டங்கள், திருவிழா, நாடகம் முதலிய நிகழுங் காலத்து அழகிய துண்டுப் பிரசுரங்கள்வழி கூட்டத்தாரின் நாட்டமுஞ் சிதையும் வாறு பறைசாற்றித் தம் விளம்பரங்களை வெளியிடுகின்றனர். இவற்றுடனமையாது குறிப்பிட்ட விடங்களில் தம்மை யன்றி பிறரெவரும் விளம்பரஞ் செய்யாவாறு அவ்வுரிமையினையும் பெற்று, அவ்விடங்களைத் தம்மரண்களாக்கி, தம் வினையை நிகழ்த்துகின்றனர். இந்நாளில் தேயிலை விளம்பரத்

திற்கு புகைரத நிலையங்களே அத்தகைய அரண்களாயின வென்பது கண் கூடு.

தேயிலையை பானமாக தயாரிக்கும் முறை, பருகும் வகை, பருகுதற்குரியார், உட்கொள்ளுவதால் பெறும் மகிழ்ச்சி முதலியவை நன்கு தெளிதர சித்திரப் படங்களில் தீட்டி படிப்பென்பதறியா பாமரர்களின் கண்ணையும் மனத்தினையும் கவருமெண்ணத்தால் பசிய மாவிலைத் தோரணங்கள் போன்று அந்நிலையங்களை அழகு படுத்தியுள்ளார். இவ்வழகிய தேயிலை விளம்பரங்கள் காண்போர் கண்வழி புக, அதனை அனுபவிக்க இயற்கையாய் உள்ளிருந் தெழும் அவாவினை ஊக்குதற் பொருட்டு அவ்விடங்களிற்றானே தேத்தண்ணீர் கடை யொன்று அமைக்கப் பெற்றுள்ளது. இவ்விளம்பரங்களில் காணப்பெறும் 'தேயிலையின் மகத்துவங்களை' ஒன்றிரண்டாகக் கற்ற நம் நாட்டுப்புறத்து இளைஞர்களுங்கூட அமர்ந்து நின்று எழுத்துக்களை கூட்டிப்படித்து, அவற்றில் உள்ளனவெல்லாம் உண்மையென நினைந்து இதுகாறும தேயிலையை உபயோகிக்காத தம் நாட்களுக்காக பெரிதும் வருந்தி, உடனே அங்குள்ள கடையில் அத்தீநீர் அருந்தி, இல்லத்தில் உபயோகிக்க தேயிலைப் பொட்டண மொன்றையும் விலைக்குப் பெற்று தம்மூருக்குள் கொண்டு செல்லுகின்றனர். தேயிலையின் "பெருமைகளைப்பற்றி" அறியாதாருக்கும் எடுத்துப் பகர்கின்றனர். இதன் வழி, எண்ணிறந்த மக்கள் இந்நாகரீகக் குடியின் கைப்படுகின்றனர். ஆகலின் தேயிலையைப்பற்றி அறிஞர் கூறுவதையும், இவ்விளம்பரங்களில் மிளிர்வதையும் ஈண்டு சற்று ஒப்ப நோக்குவாம்.

### தேயிலையின் பாகுபாடு.

1. (Thenine) (தீனைன்) என்னும் டீச்சத்து 2%
2. (Tanin) (டேனின்) என்னும் பொருள் 15%
3. (Voltile) (வாலடைல்) எண்ணெய் 4%

என்னும் முப்பொருட்கள் தேயிலையில் முக்கியமாக அடங்கியுள்ளன. இவற்றுள் 'தீனைன்' என்பது காப்பியில் உள்ளதென முன்பு கூறிய 'காப்பீன்' என்பதைப்போன்ற ஓர் கொடிய மரவுப்புப் பொருள். இதற்கு நரம்பு களைத் திடுக்கென உற்சாக மூட்டுவதும் போதை தருவதுமாகிய இருவகை குணங்களுண்டு. புளிப்பு சுவையை முறிக்கும். மாற்றுப் பொருளான 'ஆல்கலாய்ட் (Alkaloid) என்பதொன்று இத்தேயிலையிலடங்கி யிருப்பதால் தான் அதனை உட்கொண்டதும் ஒரு வித



மகிழ்ச்சியை உண்டாக்குவது போலத் தோற்றுகிறது. இப்பொருளொன்றை அதனின்றும் நீக்கப்பெறின் 'டீ' அதன் பக்தர்களுக்கு திருப்தியைத் தராது, என டாக்டர் ஆஸ்லர் M. D. கூறுகிறார். எஞ்சிய 'டேனின்' 'வாலடைல்' எண்ணெய்யின் குணங்களை ஏற்கனவே 'காப்பி' என்னும் தலையங்கத்தில் குறிப்பிட்டிருத்தலைக் காண்க. இனித் தேயிலை பானத்தின் பொதுவான தீக்குணங்களைக் காண்பாம்.

### தேயிலையின் தீக்குணங்கள்.

"இது ஜீரண சக்தியைக் கெடுத்து புளியேப்பம், வயிற்றுப்பிசம் இவற்றை உண்டாக்குகிறது."

"தேயிலைப் பானம், உணர்ச்சி நரம்புகளுக்கோர்வித கிளர்ச்சியையும், ஓரளவு மயக்கத்தையும் தருகிறது. இதனால் ஆமாசயத்தினுள்ள நரம்புகள் தூண்டப்பட, அதன் வழி மூளையிலுள்ள நுண்ணிய நரம்பு மண்டலமும் அழற்சியைப் பெற்று, இருதய வேகத்தை அதிகரிக்கச் செய்கிறது. சில நிமிடங்களுள் அதன் வேகந்தணிய, அம்மெல்லிய நரம்புகள் முன்னினும் பன்மடங்கு தளர்ச்சியை யடைந்து தம் வேலையைச் செய்ய சக்தியற்றுப் போகின்றன."

தேயிலை, நரம்புகளின் இயற்கைக்கு மாறானதும் சொற்ப நிமிடங்களே நிற்பதுமாய் உற்சாகத்தை மூட்டி, அவற்றை அழற்சி பெறச் செய்து, அமைதியின்மை, கவலை, பைத்தியம், உணர்ச்சிபங்கமாதிய நோய்களுக்கு அடிகோலி, முடிவில் தசைநார்களின் சிதிலத்தையும் இருதயத் துடிப்பையும் உண்டாக்குகிறது. இதன் மிதமிஞ்சிய உபயோகத்தால் 'பைத்தியம்' என்னும் நோய் உண்டாகுகின்றதென்பதை நம்புவதற்கேற்ற உறுதியான காரணங்கள் பல உள. ஐயர்லாந்தில் சமீபத்தில் வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கை யொன்றில் அந்நாட்டில் பைத்தியத்தை அதிகரிக்கச் செய்யும் காரணங்கள் பலவற்றில் மிதமீறிய தேயிலைப் பானமு மொன்றாம், என்னும் செய்தி குறிப்பிடத்தக்கது"—என்பது டாக்டர் தாம்சன் எம். டி. என்னும் அமெரிக்கா விற்பன்னரின் கொள்கை.

தேத் தண்ணீர் குடியால் விளையும் தீங்குகளை நம்மிற் பெரும் பகுதியினர் அறியார். அதை நாள்தோறும் உபயோகிப்பதால் நம்மாரோக்கியத்தை நாமே அறியாமல் கெடுத்துக் கொள்ளுகிறோம். இதனால் நரம்பு தளர்ச்சி, ருசியின்மை, தலைவலி, சோம்பல், சர்மபாண்டு சர்ம தொழிலுக்கிடையூறு ஆகிய தீமைகள் பல விளைக்கின்றன.—பிரபாஷி.

கலப்பற்ற வகையில் இத் தேயிலையைப் பருகுவதால் ஏற்படும் தீங்குகளுக்கோர் எல்லையில்லை——"தர்ஷக்."

ஆரோக்கிய சாதனமான ஜீரண சக்தியே இதனால் பழுதடைவதால், வயிற்றுக் கோளாறுகள் பல நாள் தோறும் அதிகரிக்கின்றன.

——டாக்டர் கே. சி. போஸ், M. B.

ஆமாசயத்தையும், நரம்புகளையும் கெடுக்கும் விஷபதார்த்தம் காப்பி, தேயிலைகளில் இருக்கின்றன. ஆகலால் இவ்விரண்டையும் நான் தொடுவதில்லை என தேகப் பயிற்சியில் தேர்ந்த யூஜென் சாண்டோ கூறுகிறார்.

ஆரோக்கியத்தையே பாழ் படுத்துகின்ற இத்தேயிலைக்குடி இந்திய ஜன சமூகத்தையே ஆழ்த்தி விடுமென அஞ்சுகிறேன். ஆயிரக்கணக்கான ஆண், பெண் மக்களின் ஜீரண கருவிகளை ஏற்கனவே, நாசமாக்கியதோடு வறுமை வாய்ப்பட்டுழலும் இந்தியருக்கு இஃதோர் மிகுந்த வரியுமாம், என ஸ்ரீ காந்தியடிகளின் அனுபவக் கூற்றுகளையும் ஊன்றி கவனிக்க, மேற்போந்தவாறு மேல் நாட்டு ரசாயன சாத்திர நிலையுணர்ந்தாரும், இருகலையுங் கற்ற கீழ் நாட்டு சாத்திர விற்பன்னரும், அனுபவத்திற் சிறந்த பெரியாரும் இத்தேயிலையின் தீங்குகளைப்பற்றி ஒருமித்து அறைகூவி சாற்றியிருக்க "திரவியத்தையும் ஆரோக்கியத்தையும், திருப்தியையும் தருகிறது. குளிர்கால மழைக்கால நோய்களைத் தடுக்கிறது. விடியற்காலையில் 'டீ' சாப்பிடின் நாள் முழுவதும் அது சுறுசுறுப்பாக இருக்கச் செய்கிறது. ஆரோக்கியத்தை உண்டாக்குகிறது. தேத்தண்ணீர் தீங்கற்றது, உற்சாக மூட்டுவது, அது மயக்கம் தருவதல்ல. குளிர்ஜுரம், விஷஜுரம், விஷபேதி, வயற்றுப்போக்கு, பிளேக், தளர்ச்சி இவைகளைத் தடுப்பது" என்று இவ் விளம்பரங்களில் காணப்பெறும் ஆச்சரியமான உண்மைகளை எவ்வறிஞன் இத்தேயிலைக் கூட்டத்தாருக்கென நூதனமாக கண்டு உதவினனோ புலனாகவில்லை. அல்லது எந்நூலின் ஆதாரத்துடன் பிரசுரித்தார்களோ அவையும் நமக்கெட்டில. தேயிலைப் பானம் ஆரோக்கியத்தைக் "கெடுப்பது" எனின் அதனைக் கெடுப்பதென்றும், "மயக்கந்தரு"மெனின் "அல்ல"வென்றும், சொற்ப நிமிஷங்களே நிற்பதாகிய மூட்டி" பின்னர் நரம்புகளுக்கு அதிக அசக்தியையும், தளர்ச்சிகளையும்" தருவதெனில் "அதிகாலையில் டீ சாப்பிட்ட நாள் முழுவதும் அது சுறுசுறுப்பாக இருக்கச் செய்கிறதென்றும் "தளர்ச்சியைத் தடுப்பது" என சாஸ்திர அநுபவங்களுக்கு முற்றிலும் உட-



ன் பாடான உண்மைகளை அஞ்சாது மறுத்து அவற்றைத் திரித்து எதிர்மறையில் கூறும் இன்னோர் நெஞ்சத்தின் வன்மையை யாதென கூறுவல்? வஞ்சம்! வஞ்சம்!!

மேலும் தேத்தண்ணீர் குளிர் ஜுரம் விஷஜுரம், விஷபேதி வயிற்றுப் போக்கு, பிளேக், தளர்ச்சி குளிர்கால, மழைகாலநோய்கள் இவற்றை தடுக்கிறது, என்னும் விளம்பரச் செய்தி மேனாட்டு மருத்துவ நூல்களிலும், கீழ் நாட்டு ஆயுள் வேதமாகிய கிரந்தங்களிலும், யாமறிந்தவரை எங்குங் காணோம். வைத்திய நிபுணர்கள் வாயினின்று கேட்டுமிலோம். ஆதலின் இப்பொய்க் கூற்றுகளை கொள்ளற் பாலன அல்லவெனத் தள்ளுதலே தகுதியுடைத்து. பகட்டான விளம்பரங்களில் கண்டவெல்லாம் உண்மையெனக் கருதியேற்கும் நம்மவரின் கண்கள் இதைக்கண்டேனும் திறக்கப் படுவதாக. நிற்க.

"தேயிலை யுற்பத்தியால் லக்ஷக்கணக்கான இந்தியர்கள் வேலை செய்து ஜீவிக்கின்றனர்" ஆதலின் இதை ஆதரியுங்கள் என்னும் பொருள்படக் கூறும் விளம்பரத்தின் மற்றோர் பகுதி, ஒருவாறு உண்மையெனினும் 'ஜீவிக்கின்றனர்" என்னுஞ் சொல்லினுக்கு பதிலாக "மடிகின்றனர்" என்னும் வினைச் சொல்லே மும்முறையும் பொருந்தும். ஏனெனில் அத்தோட்டங்களினின்று தப்பினது புண்ணியம், என உயிர்தாங்கி ஓடிவந்த கூலியாட்களின் பயங்கர அனுபவங்களை இதனை உறுதிப்படுத்துகின்றன. கலிகால யமதூதர்களான கங்காணித் தரகர்களின், 'அழகாகிய...தோட்டம்' என்னும் நயவஞ்சக சொல்வலையிற் சிக்குண்டு, தாய்நாட்டுடன் உரியார் அனைவரையும் நீத்து, பொருள் தேட பிறநாட்டுகளிலுள்ள இக் காப்பி, தேயிலைத் தோட்டங்களை யடைந்த இந்திய மக்கள் எவ்வாறு அங்குள்ள வெள்ளையர்களால் மிருகங்களினும் இழிந்தோர் எனக்கருதப்பட்டு, அநியாயமாய் அடிபட்டும், குத்துண்டும், சுட்டு வீழ்த்தப் படுகின்றனரென்பதும், அரிவையர் எவ்வாறு பலவந்தமாகக் கற்பழிக்கப் படுகின்றனர் என்பதுமாகிய கோரச் செய்திகளைப் பத்திரிக்கை வாயிலாக அறிந்து நெஞ்சந் திடுக்கிடா இந்திய மக்கள் பலர் இரார். இவற்றைக் கருதியேனும் இத்தொழிலுக்கு ஊக்கம் தருவதாய தேயிலை குடியினை அறவே ஒழித்து அதன் காரணமாக வெளியேனும் ஆயிரக்கணக்கான நம் இந்திய மக்களுக்கு இந்நாட்டிலேயே ஜீவனோபாயமான சுதேசிய கைத்தொழில்களைக் காட்டி, ஏற்ற வழிகளில் தாங்களுடைதலை ஆதரித்தல் அறமாம். இஃதே இந்தியர் என்போரின் கடனும் ஆம்.

# வீரர் நினைவு.

(D. N. V. ராஜு)
கோயமுத்தூர்

கால, வினைகளால் வீழ்ச்சியுற்ற போதும் வீரர்

"வீழ்புனல் வழிமனம் விடுநர் வாழ்க்கையும்
சூழ்வினை முடித்திடா துய்த்து வாழ்வதும்
தாழ்விலன் புடையதன் றமர் இகழ்ந்திட
வாழுநர் வாழ்க்கையும் வாழ்க்கை யாகுமோ?

நமது

திருந்தலர் புகழொடுஞ் செல்வந் துய்த்திட
வருந்தியுங் கருணையோ டடிசில் வாய்மடுத்
தருந்தியுந் துயின்று நல்லின்ப மாற்றியும்
இருந்துயிர் சுமப்பதி லிறத்தல் நன்றரோ!

வெம்பகை முடிக்க எழும் நினைவு நமது

புந்தியைக் கொடிய வெம் பசியைப் பொற்பினை
அந்தமில் முயற்சியைத் துயிலை யாற்றலை
நந்தலி லுயிரினை நன்னர் நெஞ்சினை
முந்தவந் தனைத்தையு முடிக்க ஞெண்மையே.

அம்மம்மா!

உருத்தெழு வெப்புநோய் பழகி லுய்யுமாறு
அருந்திய மருந்தனி லமையும்; சிந்தை வெப்
பெரித்து நாள்பல கழியினீண்டுமால்
வருந்துவ ரோவி! தாற்ற வல்லரோ?

என உன்னி உன்னிக் குழைந்து ஓர் வினை முடிக்க எழுவர், ஆனால் பேதையரோ தம் பாழ் வயிற்றில் கொட்டுதற்கு வெண்சோறு தேடித்தேடி

பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டி
சொல்லெல்லாம் சொல்லி நாட்டித் தனைக்கரம் விரித்து நீட்டி
மல்லெல்லாம் அகலவோட்டி மான மென்பதனை வீட்டி

இரந்துண்டு வாழ நினைவர்.

'வனமேயான ஊனிடையிருக்கு முயிரினைத் துறந்து மொண்பூணும் மானமே புறப்பது அவனியே லெவர்க்கும் வரிசையுள் தோற்றமு மாபும்"



என்ற விஜயனின் வீரமொழியைக் கருதார். இரு நூராண்டு நாயைப்போல வாழ்வதிலும் இரண்டு நாள் சிங்கத்தைப் போல அரசாள்வது சிறந்தது என்ற திப்பு சுல்தானின் தீர வார்த்தையு மெண்ணார்.

வீர பாரத! இவற்றில் எத்திறத்தினன் நீ? நின்பதிலை செயல் உதகரிக்கட்டும், வீண் சொல் வேண்டாம்.

# கர்மயோகம்.

லோகமான்ய திலகர், பூனா சர்வ ஜன சபை சஞ்சிகையில்
எழுதிய கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

கர்ம யோகத்தைப்பற்றி இன்று நான் உபதேசிக்க வந்தது ஓர் நவீன கொள்கையை அல்ல. கர்ம யோகத்தின் நியதிகள் இன்றோ நேற்றோ புதியதாக எவராலும் கண்டுபிடிக்கப் பட்டவையுமன்று. இந்நியதியைப்பற்றிய ஞானம் மிகமிகப் பழமையானது. இதனை அனுபவ பூர்வகமாக உதகரித்து முதன் முதலாக நிலை நாட்டினவர் ஸ்ரீ கண்ணபிரான் எனக் கூறவு மியலாது. இந்தியர் செல்வ சிம்மாதனத்தில் சீர்த்தியுடன் வீற்றிருந்த அநாதிகாலந் துவங்கி இக்கர்ம யோக மென்பது வழிவழியாக நமது பிதுர் ராஜ்ஜியப் பெருந்தனமாக இன்று வரை வந்துள்ளது. ஆன்ம சாஸ்திரத்தின் அதி முக்கிய தத்துவங்கள், நேர் முகமான காரிய நிகழ்ச்சி, சுய நலமற்ற அமைதி வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து கடைந்தெடுத்த அமிர்த திரட்சியே இக்கர்ம யோகம் அல்லது வினைச்சட்டமாகும். இச்சர்வ சம்மத நியதிகளுக்கிணங்க தனது வாழ்க்கையை பண்படுத்துபவனே மனிதன் அடைய விருப்பும் மகோன்னத நிலையை அடைகிறான். சாமர்த்திய ஊக்கங்களோடு ஒருவன் தனது கடமையை செய்வானாயின் பின் தொடர்ந்து இயற்கையாக சுயராஜ்யம் மலருகிறது. சுய ராஜ்யத்திற்காக கர்மயோகி பாடு படுகிறான்; தியானியும் ஞானியும் அதனை யாசிக்கின்றனர். எனவே அனைவரும் விரும்பும் இச்சுயராஜ்ய மென்பதென்னை? தன்னைத்தானே நம்பி, தன்னுடைய சர்வ சக்திகளையும் திரட்டி, அவற்றைறத் தன்னுடைய வாழ்க்கையாக—ஜீவியமாக—பரிணமிக்கச் செய்வதே இச்சுயராஜ்யமென்பதாகும். இம்மை, அம்மை ஆகிய இரு உலகிலும் இச்சுக வாழ்வு உண்டு. பண்டை க்ஷத்திரிய மன்னரின் செங்கோலின் கீழ் மக்கள் இத்தகைய சுக

வாழ்வை!--சுயராஜ்யத்தை அனுபவித்து வந்ததை கண்கூடாகக் கண்ட பின்னரே இக்காரிய விதிகளை ஏற்படுத்திய மகான்கள் நாட்டை விட்டுக் கானகஞ் சென்றனர். "இவ்வுலகில் சுயராஜ்ஜியத்தைக் கண்கூடாக அனுபவியாதவருக்குப் பரிசாக அடுத்த உலகில் சுயராஜ்ய (முத்தி) யின்பம் கண்டிப்பாக வாய்க்காது என்பதே எனது கொள்கை—உறுதியான நம்பிக்கை." வாழ்க்கையின் முடிவு சமாதி நிலைமாத்திரமல்ல" என்பதை நன்குணர்ந்த நமது பூர்வீகரின் துணிபும் இதுவேயாகும். சுமையை பிறர் மீதெறிந்து விட்டு, கைகட்டி வாளாவிருக்கும் சோம்பேறிக்கு கடவுள் உதவி செய்வாரென்ன ஒருவரும் எதிர்பார்க்க வேண்டாம். செயலற்ற மோடியர்க்கு கடவுள் உதவுதலென்றுமில்லை. தன்னைத்தானே உயர்த்த வேண்டிய காரியங்களனைத்தும் ஒருவன் தளராது செய்து வரவேண்டும். அதன் பிறகே ஈசனது உதவியை எதிர்பார்க்கலாம். அவனும் உதவிபுரிவான். நமது உழைப்பின் பயனை நாமே துய்க்கலா மென்ற பேராசையும் கொள்ள லாகாது. இது மிக எளிய காரியமுமல்ல. ஆகையால் நம்மாலியன்றதை நாம் செய்வோம். அதன் பலனை எதிர்கால சந்ததியார் அனுபவிக்கட்டும். இன்று நாம் சுவைத்தனுபவிக்கும் மாம்பழங்கள் நாம் நட்ட கன்றினின்று உண்டானவையல்ல வென்பதை ஞாபக மூட்டுகிறேன். நமதுழைப்பின் பலாபலன்களை நமது குழந்தைகளுக்கும் அவர் சந்ததியாருக்கும் விட்டுவிடுவோம். நமது கடன் பாடுபட்டு பணி செய்து கிடப்பதே. எனவே பிற்கால சந்ததியாரின் வசையைப் பெறாத வழியில் நாமின்று தளராது பாடுபடுவோம். "செய்கை—செய்கை என்பதொன்றே நமது இன்றைய லக்ஷியமாயிருக்க வேண்டும்." அச்செய்கையும் நன்றாலோசிக்கப் பட்டதாயும் சுய நல விஷமற்றதாயும் இருத்தல் அவசியம். அரசன் யார் என்பதைப் பற்றிய கவலை நமக்கு வேண்டுவதில்லை. இயன்றவழிகளிலெல்லாம் நம்மை நாம் உயர்த்திக் கொள்ள போதுமான சுதந்திரம் இருந்தால் போதுமானது. இதுதான்,

தர்மம் என்பது. லௌகிக பாரமார்த்திக பெருநிலையை அடையச் செய்யும். இத்தர்மத்தைத் தான் கர்மயோகம் நமக்கு கூறுகிறதே யொழிய பிறிதல்ல. சுயராஜ்யத்தை நாம் தீவிரமாக வேண்டுவதேன்? அதே முடிவான லக்ஷியமென்றா? இல்லை. இல்லை. ஆனால் நமது எதிர்கால மகோன்னத நிலைக்கு இச் சுயராஜ்யமோர் அத்திபாரமாகு மென்ற காரணங் கொண்டே இதனை வற்புறுத்து



கிறோம். ஆங்கில வாடையே கூடாதென்பது சுயராஜ்யத்தின் கருத்தன்று. ஆனால் உலகிலுள்ள பிற தேசத்தாரைப் போல தேசபக்தியும் தன்மதிப்பும் வாய்ந்தவராய் இந்தியரு மிருக்க வேண்டு மென்பதே இதன் நோக்க மாகும். "வாயற்ற பிராணிகளைப் போல ஓட்டப்படுவதை" நாம் தகைய வேண்டும். பஞ்சக் கொடுமையால் இந்தியர் நலியும்போது பிறதேசத்தாரே அவரைக் காப்பாற்ற நேரிடுகிறது. பொறுமை படக்கூடிய நிலை இதுவல்ல. நமக்காக ஒவ்வொரு காரியத்தையும் பிறர் செய்த லென்பது நமக்குப் பெருமையுமல்ல; லாபந் தருவது மாகாது. கடவுள் தனதுள்ளத்தை வெளியிட்டுள்ளார். தன்னைத்தானே உயர்த்த வேண்டுமன்றி பிறரால் எவனையும் உயர்த்த முடியாதென்பதை அழுத்தமாக விதித்துள்ளான். அனைத்தும் நமது கையிலேயே இருக்கிறது. "உலகில் ஒன்றுமில்லை" என கர்மயோகம் கூறவில்லை. ஆனால் உனது காரியங்கள் நிஷ்காம்ய கர்மமாகவும் சுயநலப் பற்றின்றியும், காம குரோதாதிகளால் தூண்டப் படாததாக இருக்க வேண்டு மென்றே அது அழுத்தி அழுத்திக் கூறுகிறது. இது தான் அனுபவ வேதாந்தத்தின் உண்மைத் திறவுகோலாகும். ஆனால் கலக்கத்தில் இவ்வுயர் நோக்கை மறந்துவிடுகின்றான். இது அடாது.

சுயராஜ்யத்தை எதிர்க்க அருத்தமற்ற தடைகளைப் பலர் அனுபவ அரசியலில் புகுத்திக் கலக்குகின்றனர். "பெரும் பான்மையோர் படியாதவர்" என்பது அம்முட்டுக் கட்டைகளி லொன்று. ஆனால் இது நமது வழியில் தடையாக நிற்க விடலாகா தென்பதே எனது நினைவு. கடவுளைப்பற்றிய அற்பஞானமும் எப்படி மக்களைச் சாதாரணமாக நல்வாழ்க்கையி லீடுபடுத்தி வருகிறதோ அதே போல சுயராஜ்யத்தைக் குறித்த பொது ஞானம் நமது மக்களுக்கு சிறிதளவு இருந்தாலும் நமது காரியத்திற்குப் போதுமானது. திறம்பட தனது காரியங்களைச் செய்பவர் பலர் படியாதவரா யிருக்கலாம்—இருக்கிறார்கள். இக்காரணங் கொண்டே அவர் புத்தியற்ற மூடராகார். படித்த மேதாவிக்குச் சமமான புத்திகூர்மை இவரிடத்து மிருக்கிறது, இவர்கள் தாம்குடியிருக்கும் கிராமத்தைப் பொறுத்த விவகாரங்களை அறிந்திருப்பார்களானால், பரந்த சுயராஜ்ய தத்துவத்தை யறிய கஷ்டமிராது. "படியாதவர்" என்ற காரணத்தால் உள் நாட்டுச் சட்டங்கள் (சிவில் லா) இவரை கட்டுப் படுத்தாமலில்லை; தண்டியாமலில்லை அப்படியிருக்க இயற்கை நியதியான சுயராஜ்ய விதிகளுக்கு

மாத்திரம் இவரேன் விலக்கப்பட வேண்டுமென்ற காரணம் புலப்படவில்லை. படியாதவரும் நமது சோதரரே. நமக்குரிய வேட்கையும் உரிமையும் அவர்க்கும் உண்டு. ஆகையால் படியாதவரைத் தட்டி விழிக்கச் செய்வதே படித்தவரின் முதற் கடமையாகும். கால நிலைமை மிகவும் மாறுதலடைந்துள்ளது மாத்திரமல்ல. அவை நமக்குச் சாதகமாகவு மிருக்கிறது. இவ்வரியவாய்ப்பை இழந்து விட்டால் கதி மோக்ஷம் என்றும் நமக்குக் கிடையாது.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கி கீழிடுவானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்தி நிறுப்பானுந் தன்னை
தலையாகச் செய்வானும் தான்" என்பதை மறவாதீர்.

தெய்வத்தால் ஆகாதெனினும் "முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்" என்பதும்மை காரியத்தில் ஊக்குவதாக.

D. N. G. ராஜா
"வித்யானந்த சபா"
மேட்டுப் பாளையம்

# ஐக்கிய நாணய சங்கம்.

ஐக்கியம், நாணயம், சங்கம். என மூன்றுபதச் சொற்கள் அடங்கிய ஒரு சொற்றொடராகும். ஐக்கியத்தின் தன்மை—ஒற்றுமை, கலத்தல், சேர்க்கை என்பன பொருளாம். கடவுள் படைப்பிலடங்கிய பல ஜீவராசிகளும் இஃது இன்றியமையாத குணமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆராய்ந்து பார்க்குமிடத்தில் ஒவ்வொருவரிடத்தும், ஒவ்வொன்றினிடத்தும், இக்குணம் இயல்பாகவே அமைந்துள்ளதென்பதும், இக்குணமில்லையேல் எவ்வுயிரும் எத்தகைய காரியங்களையும் எளிதில் முடிக்க முடியாதென்பதும் மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரும் இவ்வைக்கியத்தை அனுசரியாவிடில் அத்தகையார் வாழ்வு மிருக வாழ்க்கையாகவே முடியும். உதாரணமாக—மதுவை யீட்டும் தேன் வண்டுகள் ஒன்றுடனொன்று ஐக்கியப்பட்டு பல திசைகளிற் சென்று பல விதமான புட்பங்களினின்றும் மதுவை எடுத்து வந்து ஒரு கூண்டிற் சேர்த்து இனிய தேனைத் திரட்டுவதும், நம் சரீரத்திலுள்ள அவயவங்கள் வெவ்வேறு உருவங்களை உடையனவாயினும் வெவ்வேறு தொழில்களைச் செய்பனவாயினுமிருந்தாலும், எல்லாம் ஒரு சரீரத்தைச் சேர்ந்தவை



களாய் அதற்குறிய காரியங்களை ஒற்றுமையாய்ச் செய்கின்றன. மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களும் தமது செயல்களை பிற உறுப்புக்களுடன் இணங்கி ஒவ்வொறு செயலும் செய்வதை நினைமின்கள். இம்முறையே குடும்பம், சமூகம், ஊர், நாடு, உலக ஐக்கியத்தாலேயே உன்னத நிலையடைய வேண்டும். அஃதில்லாத நம் நாடு வேற்றுமையுள் மூழ்கிப் பிணக்கெனும் குணக்கு வழி உழன்று வருவதும், அதனாலேனைத்துணை பிணக்குகள், தண்டனைகள், மனக்கவலைகள் எழுகின்றன என்பதையுங் காண்க.

மானிடப் பிறவி தாங்கிய ஒவ்வொருவரும் நற்புகழ் உடையராதல் வேண்டும். பிறர் தம்மைப் புகழ வேண்டும் என்பதையே பெரு நோக்கமாகக் கொண்டு வினையாற்றுவதும், தம்மைத் தாமே புகழ்ந்து கொள்வதும் பொய்ப்புகழை அளியா.—மெய்ப்புகழாளர் தம்மைப் பிறர் புகழ்வதைச் சிறிதும் விரும்பார்; சிந்தையிற் செருக்கும் சிறிதுங் கொள்ளார். அத்தகையர் பிறர்க்கு நேரும் இன்னல்களைத் தமதாகக் கொண்டு அவற்றைக் களைவதே தங் கடமையாய்க் கைகொண்ட வீரத்ததும்பிய உள்ளத்தினர். இத்தகையர் உலகர் பாட்டு வைத்துள்ள பெருங்கருணையால் தாம் வருந்தியும் உலகிற்குத் தொண்டாற்றுவதில், தம்மைப் பிறர்புகழ்வதைச் சிறிதும் விரும்பாமலே அவரைப் பெரும்புகழ் தானே அடைகின்றது. இத்தகைய சீரிய புகழுக்கு இலக்கியமாக இலங்குவது, இந்நாளில் சாந்தமூர்த்தியாகிய காந்தியடிகளே. அத்தகைய சீரியரைப் போன்றவரும் உலகிற் சிலருண்டு. அவர்களின் பெருமைகளை ஆராயப்புகின் வரைதுறையின்றி வளர்ந்து செல்லும். அத்தகையர் இறுதியி லடையும் இன்பம் எடுத்தியம் பற்பாற்றோ?

இனி இப்பெரும் ஐக்கிய முறையை அநாதரனை பண்ணுவோர் அடையும் பயனை சிறிது ஆராய்வோம். பார்வைக்கு சற்குண முள்ளாரைப்போல் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தாயினும், அவரது பார்வை அப் புன்னகைக்கு ஒவ்வாமல் சிற்றுணர்வும், குறுகிய நோக்கமும் உடைய புல்லறிவாளர் நம் நாட்டின் பாமர மக்களை வலிவற்றவரெனவும் வாயற்றவரெனவும் கருதி, அவர்கள் சில இடுக்கண்களால் கண் கலக்கமடையக் கண்டும், கருணையோடு அஞ்சல், என்று அருளி, தம்மாலியன்ற உதவி புரிந்து உய்வழி காட்டாமல், தன் செல்வம் நிறையப் பேராவாக் கொண்டு அவர்களின் சொற்ப பொருள்களையும் தம்மதாக்க வருத்துகின்றனர். அன்றியும் எளி

யோர் பாலிறங்கி உய்வழி செய்ய முன் வருவோரையும் ஏளனம் புரிந்து இகழ்ந்துரைக்கின்றனர். ஈண்டு இவர்களின் செயல்களை விரித்துரைக்கப் புகுவோமாயின் மிகப் பெருகிச் செல்லும். அந்தோ! இத்தகையர் பொருளாசையால் பேரவாக் கொண்டு நாய் போலலைந்து, புத்தி மயங்கி, புன்னெறியிலும் ஈடுபட்டு, வீணே திரிந்து விழலுக்கிறைத்த நீர் போல் வாழ்ந்து மாள்கின்றார். இத்தகைய புன்னெறியில் பின் பற்றி நடத்தும் வாழ்வால் வரும் இன்பூட்டுவன வாகத் தோன்றினும் அவை யெல்லாம் இறுதியில் பெருந்துன்பத்தையே விளைவிக்கும். என்னே பரிதாபம்! இத்தகையரீட்டிய செல்வம் இவர்களுக்குப் பயனளித்த யாங்ஙனம், இவர்களால் உலகம் பயனடைந்தது யாங்ஙனம்? இவர்களும் மானிடரென அன்னை வயிற்றை இன்னற்படுத்த என் தோன்றுதல் வேண்டும்? "தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலால் தோன்றலின் தோன்றாமை நன்று" என பொன்மொழி எழுந்தன. அந்தோ! இவர்களின் அறிவின்மைக்குக் கல்வியும் மேலோர் கலத்தலுமின்மையே காரணமாமென அறிவுடையார் அனுதாபமடைதல் அவசியமன்றோ.

அன்புடையீர், இத்தகைய குணமுள்ள நம் நாட்டினரை இழித்துரைக்க வேண்டுமென்னும் எண்ணத்தாலேனும், பிற எத்தகைய நோக்கங் கொண்டேனும் அல்ல. அறிஞர்களுக்கு ஏற்படும் தொல்லைகள் தொலைய வேண்டுமென்றே வரையலானேன்.

நம் பாரதமாதவின் கருப்பத்திலுதித்த ஆருயிர் தோழர்களாகிய ஆண் பெண் மக்களுள், ஒரு இனத்தாரை நாம் தீண்டக்கூடாத தாழ்ந்த வகுப்பினரென்று கருதி நடத்துவதில் அது பிரிவினையையும் ஒற்றுமைக் குறைவையும் உண்டாக்குகிற தென்பதும், அதனானே அந்நிய மதத்தினர் நம் மக்களை ஏமாற்றித் தங்கள் தங்கள் மதங்களில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானவர்களைச் சேர்த்து வருவதில், நம் உன்னத மதம், க்ஷீண தசையடையச் செய்யும் பாதகத்திற்குள்ளாகிறோம். அத்தகைய வகுப்பினரை சம நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே எங்கும் முயற்சிக்கப் படுகிறது. இனியேனும் நாம் பேதமின்றி எல்லா வகுப்பினரோடும் ஐக்கியப்பட்டு இத்தீண்டாமையை யொழிக்க முயல்வோமாக.

நந்தொன்மை நாடு ஆங்கில ஆட்சியில் சில அநுகூலங்கள ஏற்பட்டிருந்தாயினும் ஆண்டுதோறும் அளவிலாத பொருள்கள் கொள்ளை போய்க்கொண்டிருக்கின்றன. நம் மக்கள் வறுமைப் பிணி



யால் தத்தளித்து, பிறர் எள்ளி நகையாடத்தக்க ஈன ஸ்திதியில் வாழ்ந்து வருகின்றனர். இக்கொடுமைகளை ஒழிக்கவே உயர்தரக் கல்வியிற் சிறந்த நம் இந்திய மக்கள் பேருதவியால் ஐக்கிய சங்கங்களுக்கு உதவிகளும் ஐக்கியப்பிரசாரங்களும் பத்திரிகை வாயிலாகவும் உலாவுதல் கண்டு மகிழப்படுகிறது. எனினும், நம்மவரில் உலக சிரேஷ்டரான காந்தியடிகளும், உயர்தரக்கலைகளை யுணர்ந்து பெருங்கீர்த்தி வாய்ந்த பெரும்பாலரும், ஆண் பெண் மக்களும், நம் சமூகமும், நாடும் முன்னேற்றமடைய ஐக்கிய முணர்ந்து அல்லும் பகலும் உழைத்து நம் நாட்டினரை கரையேற்ற விரும்பி யிருத்தல் கண்டு நாம் மகிழ்தல் அவசியமே.

நேயர்காள்! ஆகலின் நம் பண்டை நாடு சீரும் சிறப்பும் பெற்று மக்களெல்லீரும் இன்ப வாழ்க்கை நடத்த வேண்டுமென்று விரும்பி, "அத்தகைய அரிய நோக்கத்தை மேற் கொள்ள நம்மால் முடியுமா" என்று ஐயுற்றுப் பின்னிடாமல், நம் தமிழ் நாட்டிற்கு அன்பு வழி பற்றி, அறநெறி நின்று, சீரிய தொண்டாற்ற முற்பட்டால், திருவருள் முன்னின்று ஆணை செய்யும் என்பதில் அணுவளவும் ஐயம் இல்லை. (இனி நாணய மென்னும் பொருளைப்பற்றி ஆராய்வோம்).

(தொடரும்.)

A. வெங்கடாசல முதலியார்.
(மதுக்கரை, ஐக்கிய நாணய சங்கத்தலைவர்.)

## ஹிந்து மதத்தின் க்ஷீணதசை.

ஹிந்து சங்கதன் என்னும் இயக்கம் இன்றியமையாதது என்ற உணர்ச்சி இப்பொழுதுதான் ஹிந்துக்கள் மனதில் உதித்திருக்கிறது. பூஜ்யரும வங்காள சிரேஷ்டருமான ஸர் பி. ஸி. ரே பரீத்பூரில் கூடின மாகாண ஹிந்து மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைமை வகித்து வங்காளத்தில் ஹிந்து ஜாதி நாசத்தை அடைந்து கொண்டிருக்கிற தென்றும் ஹிந்துக்கள் இந்த மயக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளாவிட்டால் இவ்வுலகில் ஹிந்துப் பூண்டே அழிந்து போய் விடுமென்றும் சொன்னார். என்னுடைய அபிப்பிராயமும் இதுவே. ஆனால் நான் அதை வெளிப்படையாய்ச் சொல்ல இஷ்டப் படாமலிருந்தேன். வேறு அன்னியர் எதாவது தங்களைப் பற்றி சொன்னால் வங்காளிகள் அதை அகௌரவமாக நினைப்பார்கள்.

வங்காளிகளில் ஒருவரே அப்படிப் பேசின பிறகு நானும் பகிரங்கமாய்ச் சொல்ல எத்தனித்தேன். 20 வருஷங்களுக்கு முன் ஸர் சுரேந்திரநாத் பனர்ஜ்ஜியின் மருமகன் கர்னல் டாக்டர் யூ. என். முகர்ஜ்ஜி ஹிந்துக்கள் க்ஷீண கதியடைகிறார்கள் என்பதை ருஜூப்படுத்தி ஒரு புள்ளி விவரத்தை வெளியிட்டார். இப்பொழுது ஸர். பி. ஸி. ரேயும் அவ்வபிப்பிராயத்தையே கொண்டிருக்கின்றார்.

இந்த துர் அதிருஷ்டம் பிடித்த தேசம் மலேரியா, கால்ஸார், காலரா முதலிய வியாதிகளுக்கு இரையாகின்றது. ஹிந்துக்களும் மகமதியர்களும் தொத்து வியாதிகளால் பீடிக்கப்படும் பொழுது ஹிந்துக்கள் மாத்திரம் ஜனசங்கியையில் என் குறைந்து கொண்டு வரவேண்டுமென்று தெரியவில்லை. ஐரோப்பியர்கள் ஜன சங்கியை விருத்தியாவதைக் குறைக்க வழிதேடிக் கொண்டிருக்கும் பொழுது வங்காளத்தில் தானாகவே ஜனங்களின் சங்கியை குறைந்து கொண்டிருக்கிறது. (லாலாலஜபதிராய்.)

உயர்தர இந்துக்கள் தீண்டாமையை அதிக தீவிரமாய் அனுஷ்டிப்பதால் ஒடுக்கப்பட்ட ஜாதியார் கிருஸ்தவ மதத்தைத் தழுவுகின்றனர். இஸ்லாம் மதத்திலோவென்றால் ஈர்ணா பேதமென்பதே கிடையாது.

இஸ்லாம் மதத்தைப் புதிதாய்ச் சேர்ந்தவர் மற்றவர்களோடு சமபந்தி போசனஞ் செய்யலாம். இன்னும் மற்ற சமூக உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. கிருஸ்தவ மதத்தில் சேருகிறவர்களுக்கு பாதிரிமார்கள் கல்வி புகட்டுகின்றனர். இன்னும் அநேக உதவிகள் செய்கின்றனர். ஹிந்து மதத்திற்கு பிரஷ்டஞ் செயவது என்ற கொள்கையிருக்கின்றதே ஒழிய அபயங் கொடுத்து அழைத்துக் கொள்ளுகிறதென்கிற தர்மங் கிடையாது. ஹிந்துக்கள் தீண்டாத ஜாதியாரென்று சொல்லி அவர்களை ஒதுக்கிக் கொடூரமாய் நடத்துவதைப் பார்க்க எனக்கு சகிக்கவில்லை. ஒரு பூனை குப்பை போட்டிருக்கும் இடத்தில் போய் எச்சிலிருக்கும் அழுகின மாமிசத்தைத் தின்றுவிட்டு வந்து சமயலிடத்தில் வைத்திருக்கிற பாலை குடித்துவிடுகிறது. இவைகளையெல்லாம் இந்துக்கள் ஆக்ஷேபிக்கிறதில்லை. நம்முடைய மதம் சமயலறையில் போய்ப் பதுங்கி கொண்டு விட்டதென்றும் பேடித்தனமான சமய ஆசாரங்கள் சமூகத்திற்கே நாசத்தை உண்டுபண்ணி விட்டனவென்றும் ஸ்வாமி விவேகானந்தர் சொல்லி உளார்.



என்னை ஒரு அன்னியன் "என் 30 கோடி ஜனங்கள் சில ஐரோப்பியர்களின் கீழ் அடிமைப் பட்டிருக்கிறார்கள்" என்று கேட்டால் தீண்டாமை என்னும் சாபந்தான் இதற்குக் காரணமென்றும் ஸ்வராஜ்யம் பெருவதற்கும் அதேதான் ஒரு பெரிய முட்டுக்கட்டை என்றும் சொல்லுவேன். கடவுள் ஸர்வாந்தர்யாமி என்றும் கீதை முதலிய கிரந்தங்களை எடுத்துரைக்கின்றோம். ஆனால் ஒரு சுத்தமான பஞ்சமன் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொடுத்தால் அதை அருந்தினால் பிரஷ்டர்களாய்ப் போய் விடுவோ வென்று எண்ணி எழுந்துபோய் விடுகின்றனர்.

x x x x

சாஸ்திரங்களில் இருந்து சுலோகங்களைப் படுங்காலம் போய் விட்டது. வடவங்காளத்தில் ஹிந்து ஜாதி வெகு விரைவாய் நாசமடைந்து கொண்டு வருகின்றது. அது தற்கொலை புரிந்து கொள்ளுகிறது. நம்முடைய நிலைமையை உணராவிட்டால் இன்னும் 200 வருஷங்களுக்குள் இவ்வுலகத்தில் ஹிந்துக்களே இல்லாமற் போய் விடுவார்கள். வெறும்பேச்சுப் பேசுவதில் பிரயோஜனமில்லை.

ஹிந்து மதத்தை நாம் காப்பாற்ற முன் வந்திருக்கிறோமென்பதை நம்முடைய செயலால் காண்பிக்க வேண்டும். சாஸ்திரங்களைப் பற்றிப் பேசினதால் என்னுடைய வைதீக ஹிந்துக்கள் கோபித்துக் கொள்ளக் கூடாதென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். நடக்கும் விஷயங்களை நன்கு உணர்ந்து அதின் படிப்பினையை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். தீண்டாதவர்கள் எப்படிப்போனாலும் போகட்டுமென்று வர்ணாசிரமிகள் சொல்லுகின்றனர். சமூக ஆசாரங்களில் கொஞ்சங்கூட விட்டுக்கொடுக்க அவர்களுக்கு இஷ்டமில்லை. இந்த போலித்தனமான மாதாபிமானத்தை அவர்கள் விட்டொழிக்க வேண்டும். (பி. சி. ரே.)

## சப்பாத்திக்கள்ளியை எருவாக்கும் விதம்.

சப்பாத்திக்கள்ளி வெளியில் முட்களுடன் உள்ளே ரசமுடன் மிருதுவான நூல் போன்ற வஸ்துவுடனும் உள்ளதென்பது எல்லோரும் அறிந்த விஷயம். புதிதாக வெட்டிய சப்பாத்திக் கள்ளியில் 100க்கு 90 அல்லது 95 பாகம் தண்ணீர் இருக்கும். அது அழுகினால் ஒருவித புளிப்புள்ள ரசம் வெளிவரும். இந்த சப்பாத்திக் கள்ளியை மட்டும் அழுகும்படி செய்தால் அது இரண்டு வாரத்திற்

குள் அழுகிப்போய் அந்தப் புளிப்பான ரசமானது வெளி வந்து அதை முழுக்கிவிடும். அப்படியே விட்டுவிட்டால் ஒரு வருடமானாலுங்கூட சப்பாத்திக்கள்ளி சரியாய் அழுகாமலும் அதனால் அந்த முட்கள் மழுங்காமலும் இருக்கும். ஆகையால் அதை செவ்வயாய் அழுகச் செய்வதற்கு, அதிலுள்ள அதிகமான ஈரத்தில், போதுமானதைத்தவிர மிஞ்சியதை வேறுவிதமாக உபயோகிக்க வேண்டும். அதிலுள்ள அதிக புளிப்பு ரசத்தின் தன்மையழிய வேண்டும். அப்படிச் செய்வதற்கு அழுகக் கூடியதும் ஈரமில்லாத உபயோகமற்ற வஸ்துக்களை அந்தக கள்ளியுடன் கலக்க வேண்டும். சாதாரணமாக வைக்கோல், அரிதாள், உலர்ந்த புல் அல்லது இலைகள் முதலியவைகளை உபயோகிக்கலாம். இவைகள் ஒன்றும் அகப்படா விட்டால், உலர்ந்த மண்ணை கலப்பதற்குப் போதுமானது.

2. அந்த சப்பாத்தி நன்றாய் அழுக வேண்டுமானால், மிகவும் நுட்பமாயுள்ள கிருமிகளுக்கு வேண்டிய "நைட் ரோஜன்" "பாஸ்பேட்" முதலியவைகளும், நடுநிலைமையும் இருக்க வேண்டும். ஏனென்றால், கிருமிகள் தான் அவைகளைச் செம்மையாய் அழுகச் செய்கின்றன. ஆதலால் நல்ல எலும்புத் தூளாவது அல்லது திருச்சி பாஸ்பேட்டாவது அதனுடன் சேர்க்க வேண்டிய தவசியம். கிருமிகள் இருக்கின்றனவென்று நிச்சயமாய்க் கொள்வதற்கும், அதற்கு வேண்டிய "நைட். ரோஜன்" உண்டாவதற்கும் கொஞ்சம் மாட்டெரு சேர்க்க வேண்டும.

3. சப்பாத்திக் கள்ளியை எருவாக்குவதற்கு ஒரு குழியை வெட்டி, அதில் போட்டுச் செய்வதே நலம். அந்தக் குழியானது நீளம எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அகலம் மட்டும் ஆறு அடிக்குமேல் படாமல் இருக்க வேண்டும். ஏனெனில் தண்ணீர் விடுவதற்கும் எருவைப் பிரட்டிக் கொடுப்பதற்கும் 6 அடிக்கு மேலிருந்தால் கடினமாயிருக்கும். குழி தோண்டுவதென்றால் சுற்றியுள்ள இடங்களை விடக் கொஞ்சம் உயர்ந்த இடத்திலேயே தோண்ட வேண்டும். மேலும் அந்தக் குழி மூன்று அடி ஆழத்திற்கு மேல் இருக்கக் கூடாது. ஏனென்றால் மழை காலங்களில் தண்ணீர் அதிகமாக ஊற்றமுண்டாகி நீர் ததும்பிக் கொண்டே யிருக்கும்.

4. சப்பாததிக் கள்ளியைக் குழியில் 6 அங்குல முதல் ஒரு அடி வரையில் பருமனுள்ள அடுக்காகப் போடவேண்டும். அதன் மேல் அதே பருமனுக்கு வைக்கோல் அல்லது களைப்புல் போன்ற



வைகளைப் பரப்ப வேண்டும். உலர்ந்த மண்ணை உபயோகித்தால் சப்பாத்திக் கள்ளியை நன்றாய் மூடுவதற்குப் போதுமான அளவு அதன் மேல் 3 அல்லது 5 பவுன் வரையிலும் எலும்புத்தூளைத் தூவ வேண்டும். எலும்புத்தூள் கிருமிகளுக்கு வேண்டிய "பாஸ்பேட்" கொடுப்பதற்காகவே தூவப்படுகிறது. எலும்புத்தூள் கிடைக்கா விட்டால் குளத்து மண்ணை அல்லது ஆற்று மண்ணை அல்லது மீன் கழுவையோ உபயோகிக்கலாம். அதன் மேல் 15 பவுன் முதல் 20 பவுன் வரையில் மாட்டெருவைக் கொஞ்சம் தண்ணீர் தெளித்துப் பிசின் போலாக்கித் தெளிக்க வேண்டும். முதல் அடுக்கு மேற் சொன்னபடி ஆன பிறகு, திரும்பவும் முன் சொல்லியது போல சப்பாத்திக் கள்ளியைப் போட்டு அதன் மேல் உலர்ந்த இலைகள் புல் முதலியவைகளைப் போட வேண்டும. பிறகு எலும்புத் தூளும் மாட்டெருவும் அதன் மேல் தூவ வேண்டும். இதேமாதிரி குழியின் மட்டத்திற்கு மேல் 3 அடி அல்லது 4 அடி வரையில் போட்டு குழியை நிரப்ப வேண்டும். கடைசி அடுக்கின் மேல் 4 முதல் 6 அங்குலம் வரையில் பருமனுக்கு மண் போட வேண்டும். அப்படிப் போடும் மண்ணானது பக்கங்களையும் மேல் பக்கங்களையும் நன்றாய் மூட வேண்டும். மேல் பக்கங்களையும் 2 அல்லது 3 அங்குல பருமனுக்கு மண்ணைப் பூசினால் மிகவும் நலம். இரண்டு வாரத்திற்குள் எல்லாம் குழியின் மட்டத்திற்கு அமுக்கு விடும். அழுகும் வஸ்துக்களை சூரிய வெப்பத்திலிருந்தும மழையிலிருந்தும காப்பாற்ற, அந்தக் குழியின் மேல் கூரையினால் ஒரு பந்தல் போட வேண்டும. அல்லது மண்ணைத்தூவி, மண்ணைப் பூசி விடலாம்.

5. சீக்கிரம் சப்பாத்திக்கள்ளி அழுகுவதும், எருவாக மாறுவதும் கிருமிகளுக்குக் கிடைக்கும் ஆகாரத்தைப் பொருத்தது மல்லாமல் நாம் அவற்றைக் கிளறிக் கொடுப்பதையும் பொருத்தது. எரு அதி சீக்கிரம் கிடைக்க வேண்டுமென்ற அவசரமில்லாவிடில், ஒன்றும் செய்யாமலிருந்தால் கூட ஒரு வருடத்தில் எல்லா முட்களும் மழுங்கி வயல்களுக்கு உடனே உபயோகிக்கக் கூடும் தன்மையால் எரு கிடைக்கும். எரு வெகு சீக்கிரம் வேண்டுமென்றால் அடிக்கடி குழியைக் கிளறிக் கொடுத்துக் கொண்டும், போதுமான ஈரக்கசிவு இருக்கிறதாவென்று பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டும்.

6. குழி தோண்டிய இரண்டு வாரத்திற்குப் பின்னும் ஒவ்வொரு மாதக் கடைசியில் கூடியமட்டும் எரு வஸ்த்துக்களைத் துடுப்புக்

கொண்டு கிளறிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செய்து கொண்டு வந்தால் ஐந்து அல்லது 6 மாதங்களிலேயே சப்பாத்தி முட்களெல்லாம் மழுங்கி எரு தயாராகிவிடும். அப்படிச் செய்யாவிட்டால் சில பக்கங்களில் அழுகியும் சில பக்கங்களில் அழுகாமலும் முட்களுடனுமிருக்கும். மேலும் கிளறிக் கொடுக்கும் போதெல்லாம் போதுமான ஈரமிருக்கிறதா வென்று பார்க்க வேண்டும். ஈரம் போதாவிடில் தண்ணீரை சமமாகத் தெளிக்க வேண்டும். ரொம்பவும் ஈரமாகவோ அல்லது மிகவும் உலர்ந்தோ இருந்தால் அழுகுதல் நின்றோ அல்லது குறைந்தோ போய்விடும்.

சப்பாத்திக் கள்ளியிலிருந்து எரு சேர்த்தலின் செலவு.

7. மேற் கூறியபடி சப்பாத்திக் கள்ளியிலிருந்து எருச்சேர்ப்பதை, சேலம் ஜில்லாவைச் சேர்ந்த எல்லூர் கிராம புனருத்தாரணச் சேங்கிரத்தில் முயற்சி செய்ததில் ஒரு டன் எருச் செய்ய ரூ. 3-9-0 செலவாயிற்று. சாதாரணமாக ஒரு டன் எருவானது சிறியதாயிருந்தால் மூன்று வண்டியும் பெரியதாயிருந்தால் இரண்டு வண்டியும் ஆகுமெனபதால் ஒரு வண்டி எருவுக்கு 1-8-0 ஆகும் என்று சொல்லலாம்.

எருவின் விலை, இடத்தையும், அங்கே கொடுக்க வேண்டிய கூலியையும் பொருத்தது.

இ. வி.

# நாட்டு நடப்பு.

## வளையலைக் கொடுத்து வாதுக்கிழுத்த மாது.

டில்லி வளையல் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 100 பெண்கள் டில்லி மணிகுண்டு முதலிய விடங்களில் அன்னியத் துணி கடைகளை மறியல் செய்து வருவதில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. அதில் இரண்டு விஷயங்கள் முக்கியமானவைகள். ஒரு சமயம் அன்னியத்துணியை வாங்கவந்த ஓர் கனவானுக்கு ஓர் மாது வளையலைக் கொடுத்து, வீட்டிற்குச் சென்று வளையலை யணிந்து முக்காடிடுங்கள். அன்னிய ஆடையைப் பகிஷ்கரிக்க திறமையில்லையானால் உமக்கும் ஓர் பெண் பிள்ளைக்கும் வித்தியாசமில்லை என்று சொன்னாள். அக்கூட்டத்தில் மற்றொரு பெண்ணின் கையிலிருந்த கைக் கெடியாரத்தைக் கண்டு அந்நிய நாட்டுக் கடியாரம் அணிவது அநீதி என்றார். அம்மாது அக்கடியாரத்தை அவ்விடத்திலேயே உடைத்து விட்டாள். துணி வாங்கவந்த கனவானும் தான் அணிந்திருந்திருந்த சீமைத்



துணிகளை எறிந்து விட்டு காந்திக்கு ஜே என்ற கோஷத்துடன் வண்டியேறிச் சென்றார்.

## போலீஸ் அதிகாரியை போருக்கிழுத்த பெண்.

டில்லியில் அன்னிய ஆடை கடை ஒன்றில் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் அன்னியத்துணி வாங்கவந்தவருக்கு வளையல் சங்கத்தின் மாதொருத்தி வளையலைக் கொடுத்தாள். அக்கனவான் கேலி செய்து வளையலை உடைத்துவிட்டு சீமைத்துணி வாங்க ஆரம்பித்தார். உடனே அப்பெண் இடுப்பிலிருந்த ஓர் கத்தியை எடுத்து அவரிடம் கொடுத்து என்னைக் கொன்ற பிறகு சீமைத்துணி வாங்கி யணியுங்கள் எனச் சொன்னாள். பிறகு அதை நன்கு ஆராய்ந்த கனவான் இனி சீமைத்துணி வாங்குவதில்லை என்று கூறிச் சென்று விட்டார்.

## இராமாயணம் கேட்கும் பசுங்கிடாரி.

ஆத்தக்குடியில் சென்ற சிலவாரமாக நடைபெறும் ராமாயணப் பிரசங்கத்தை நாள்தோறும் ஒரு பசுங்கிடாரி சென்று கேட்டு வருகிறதாம். இரவில் கதை ஆரம்பிக்கும் பொழுது அது வந்து படுத்துக் கொள்கிறதாம். முடிந்ததும் எழுந்து போய் விடுகிறதாம். அது ஒரு முஸ்லீம் வீட்டுக் கிடாரியாம்.

## 5000 ஈச்சமரங்கள் ஒழிந்தன.

சிஸ்தாரோவிலுள்ள கள்ளிறக்கும் 5000 ஈச்சமரங்களை வெட்டி வீழ்த்திவிட்டு கோடாரிகளுடன் யாவரும் ஊர் வலமாகச் சென்றார்கள்.

## சென்குப்தா மீண்டும் தலைவரானார்.

கல்கத்தா ஏப்ரல் 29ம் தேதி நடந்த கார்பரேஷன் விசேஷ கூட்டத்தில் சிறையிலிருக்கும் ஸ்ரீ சென்குப்தாவை கார்பரேஷன் தலைவராக 5ம் முறை தேர்ந்தெடுத்தார்கள். இச் செய்தியை எல்லோரும் சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். பிரபல காங்கிரஸ் வாதியான ஸ்ரீ சந்தோஷ பாசுவை உதவிமேயராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

## கல்கத்தா பத்திரிகைகள் நிலை.

பத்திரிகைகள் அவசர சட்டத்தின் படி "லிபர்ட்டி" 'வங்காளி' ஆகிய இரண்டு பத்திரிகைகளுக்கும் 5000 ரூபாய் ஜாமீன்கட்ட வேண்டுமென சர்க்கார் சம்மன் பிறபித்துள்ளார்கள். அப்பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள் பத்திரிகைகளை நிறுத்திவிடுவதெனத் தீர்மானித்திருப்பதாகத் தமிழ் நாடு எழுதுகிறது.

## சீமைத்துணி பகிஷ்காரம்,

கல்கத்தா இந்தியா சீமைத் துணி இறக்குமதிக்காக மார்வாரி வர்த்தக சங்கத்தார், வர்த்தகக் கமிட்டி முதலியவைகளின் பிரதிநிதிகள் இன்றுமாலை பண்டித மாளவ்யாவின் முன்னிலையில் கூடினார்கள். தீர்வை மசோதாவைக் கண்டிப்பதற்காகவும், இந்தியக் கைத்தொழிலை ஆதரிப்பதற்காகவும், அடுத்த டிசம்பர் மாதம் 31ம் தேதிவரையில் சீமைத் துணிகளுக்கு ஆர்டர் கொடுப்பதில்லையென முடிவு செய்திருக்கிறார்கள். 1931-ம் வருட ஆரம்ப முதல் ஏப்ரல் 31-ம் தேதி வரையில் பண்டித மாளவ்யா அனுமதியின்றி எத்தகைய சீமைத் துணிக்கும் ஆர்டர்கொடுப்பதில்லையெனத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## அம்மன் கோவில் மிருகபலி.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி ஜால்பூரில் பெண் தொண்டர்களுடன் இருந்து வருகிறார். அவர்கள் தங்கிருக்கும் இடத்திற் கருகில் உள்ள ஒரு அம்மன் கோயிலில் பலியிட தப்லாஸ் வகுப்பினைச் சேர்ந்தவர்கள் நாலு வெள்ளாடுகளையும் மூன்று கோழிகளையும் கொண்டு வந்தனர். ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி உபதேசம் செய்து பலியிடலைத் தடுத்து பிராணிகளின் உயிரைக் காப்பாற்றினார். மற்றும் மதி உபதேசம் செய்து கொண்டிருக்கையில் ஒரு பெண் ஆவேசங்கொண்டு, தமக்கு அம்மன் அருள் கிடைத்ததென்றும் அந்த வகுப்பார் மிருகபலியையும் மதுபானத்தையும் விட்டு விட வேண்டுமென்றும் காந்தி அடிகள் ஒரு வருடத்தில் ராஜ்ஜியம் பெறுவாரென்றும் கூறினார்.

சீமைத்துணி வாங்கும் வியாபாரிக்கு 101 ரூபாய் அபராதம்.— நாட்டூரிலுள்ள சீமைத் துணி வியாபாரிகள் கூடி இனிமேல் சீமைத் துணிகளை எந்த வியாபாரிகளும் வாங்கக் கூடாதென்றும், இத்தீர்மானத்திற்கு விரோதமாக யாரேனும் வாங்கினால் 101 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்வூரிலுள்ள தையற்காரர்களும் இனி சீமைத்துணி தைப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளார்கள்.

# உழவு.

உலகிலுள்ள, உழவு, கைத்தொழில், வாணிபம், சேவகம் முதலிய பல தொழில்களுள், முதற்கூறிய உழவுத் தொழிலே சிறந்ததாகும்.



"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு".

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்".

என்னும் அமுத வாக்குகளினாலே உழவு தொழிலின் சிறப்பு நன்கு விளங்குகின்றது.

முற்காலத்தில் உழவுத் தொழில் சிறந்ததாகக் கொண்டாடப் பெற்று யாவராலும் கைக்கொள்ளப் பட்டிருந்தது. இக்காலத்திலோ பயிர் செய்து வாழ்பவரைக் கண்டால் அநேகர் தாழ்வாகக் கருதுகின்றனர். இது மதிஈனமே. பெரும்பான்மையோர், தங்களுக்குச் சொந்தமாகப் பயிர் செய்யக் கூடிய பூமியிருந்த போதிலும், ஆங்கிலம் படித்து அடிமை உத்தியோகத்திலமர்ந்து சொற்ப ஊதியம் பெற்று மிகவும் கஷ்டப்படுதலே சிலாக்கியம் என்று கருதுகின்றார்கள். அந்தோ! அதையே மிகவும் மதிப்புள்ளதாயுங் கொள்கிறார்கள். இவ்வெண்ணங் கொண்டே அநேகர், தங்கள் பரம்பரையாக வந்த உழவுத் தொழிலைக் கை விட்டு அடிமைச் சேவகம் புகுந்தனர். இது பற்றியே நம் நாட்டில் உழவுத் தொழில் கேடடைந்து கொண்டே வருகிறது. முற்காலங்களில் விளைந்த அவ்வளவு செழிப்புள்ள தானிய வகைகள் இக்காலத்திலிருக்கின்றனவோ? இல்லை. இதற்குக் காரணம் நம் மூட புத்தியன்றோ? உழவுத்தொழிலை இகழ்ச்சியெனக் கருதியதால் அதை விருத்தி செய்ய இடமில்லாது நாளுக்கு நாள் விருத்தி யற்றுக்கொண்டே வருகிறது. உழுது வாழ்பவன் என்றாலே அநேக நாகரீகப் பெரியார்கள் கேவலமாக நினைக்கிறார்கள். பெண்களுங் கூட, பயிர் செய்பவனை மணவாளனாகத் தேர்ந்தெடுத்தால் அறவே வேண்டாமென்று மறுத்து, சிறிது ஆங்கிலம் கற்று சொற்ப ஊதியம் பெறும் அடிமை உத்தியோகத்திலிருப்பவனையே கோறுகின்றனர். என்னே இக்கெடுமதி? உழவின் சிறப்பை அறியாததாலன்றோ!

உழவைப்பற்றி ஏன் இகழ்ச்சி கொள்ளல் வேண்டும். உழவின்றி வுலகம் வுய்யுமா? உழவின்றி வுலகம் நடக்குமா? ஒருக்காலும் முடியாது. உழவு தொழிலைச் செய்பவருக்கு நாம் எவ்வளவு கடமைப் பட்டிருக்கிறோம். அவர்களே நம்மைக் காப்பாற்றுபவர்கள். பிற தொழில் புரிபவர்களும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள உழவு தொழிலாளிகளையே எதிர்பார்க்க வேண்டும். இதனாலேயே அவர்கள்

பெருமை எவ்வளவென்று விளங்கவில்லையா? இன்னும் உழவுத் தொழில் மற்றெல்லாத் தொழில்களுக்கும் புனிதமானதும் ஆகும். பிற தொழில்களுள் இருக்கும் சூது, வாது, வஞ்சம், மோசம், அநியாயம் முதலிய எக்கெடுதியும் இத்தொழிலில் காணோம். உழுபவன் தன்னிலங்களுக்குச் சென்று உழுது பயிர் செய்து, அதனால் வரும் பெரும் பயனையடைந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு மற்றெல்லோரையும் காப்பாற்றுகிறான். இதனால் இத்தொழில் மாட்சிமையுடையது தானே? இன்னும் இத்தொழிலில், ஒருவரைப் பணிய வேண்டியதில்லை, பின் செல்ல வேண்டியதில்லை, புறங்கூற வேண்டியதில்லை, கெடுக்க வேண்டியதில்லை, மற்றும் பொய்கூற வேண்டியதில்லை, அடிமைத் தொழில் புரிய வேண்டியதில்லை, ஒரு அதிகாரியைத் திருப்தி செய்வதற்காக எப்புன் தொழிலும் செய்ய வேண்டியதில்லை. எவ்வளவு புனிதமான தொழில்! இதனாலன்றோ "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளது.

பயிரில்லா விட்டால் உயிர் ஓங்குமோ? நாட்டில் பயிர் விளைந்தால் தான், விலை கொடுத்தேனும் வாங்கியுண்டு ஜீவித்திருக்க முடியும். அரசனாயிருந்த போதிலும், குபேர சம்பத்துடையவனாயிருந்த போதிலும், மிகுந்த தேகபலம் பொருந்தியவனாயிருந்த போதிலும், புகழ்பெற்ற கவிவாணனாயிருந்த போதிலும், பெரும வர்த்தகனாயிருந்த போதிலும், மற்றும் எவ்வித கீர்த்தி வாய்ந்தவனாயிருந்த போதிலும், நிலத்தில் உழப்பெற்று விளைந்த பயிராலன்றி ஜீவித்திருக்க முடியுமா? முடியவே முடியாது. இதனால் பயிரினுடையதும் அதைச் செய்விப்பவனுடையதுமாகிய அளவுகடந்த பெருமை விளங்கவில்லையா?

ஒரு கிராமவாசி தன்னல்விதி வசத்தால் மிகுந்த பூஸ்திதி யடைந்திருந்தார். அவர் உழவுத் தொழிலை மிகவும் தாழ்வாக எண்ணினார். தன்னிலங்களைக் கிஞ்சித்தும் கவனியாது ஆங்கிலம் கற்று உத்தியோகம் பெறவேண்டி, நகரத்திற்குச் சென்று ஆங்கிலப்பள்ளியில் சேர்ந்தார். இவர் துரதிர்ஷ்டத்தாலோ, அல்லது மந்த புத்தியினாலோ, ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு மூன்று வருஷங்களிருந்து கடைசியாக மெட்ரிக்குலேஷன் பரீட்சை தேறுவதற்கே கஷ்டசாத்தியமாக முடிந்தது. இவர் இதற்குள்ளாக முப்பது வயது பூர்த்தியாயடையப் பெற்றார். பள்ளிக்கூடத்தில் எவ்வளவோ கஷ்டம். தினமும் உபாத்தியாயரிடத்தில் கடுமொழி, பிறமாணவர்கள் "நாட்டுப்புறத்து மட்டி" யென்று ஏளனம் செய்யும் கேலி வார்த்தைகள்,



இரவுகளில் எண்ணை சிலவு, பெருத்த மனச்சஞ்சலம், ஆகிய பல துன்பங்கள் பட்டு பயனொன்றுமடையாது நாட்களை வீணாகக் கழித்தார். இதற்குள்ளாக தனது கிராமத்தில் இவர் நிலங்களை யாரும் கவனியாததால் அவை பாழடைந்து விட்டன. தன் அடிமைப்படிப்புக்காக வேண்டிய பொருளுக்காகப் பல நிலங்களும் விற்கப்பெற்றன. கடைசியில் அநேக பூமிகளை யிழந்து, சொற்பமே நிற்கப்பெற்றார். ஆங்கிலம் கற்கச் சென்று உழவை இகழ்ந்த கிராமவாசி பரீட்சை தேறாததால் உத்தியோகமும் கிடைக்கப் பெறாது, தன்னூர் திரும்பிப் பெரிதும் கஷ்டப்பட்டு ஜீவியத்திற்கே போதுமான விளைவு பெறாமல் வருந்திக் கொண்டிருக்கிறார். இது உண்மையே. இன்னவர் பயிர்த் தொழிலை விடாது அதிலேயேயிருந்து விருத்தி செய்திருந்தால் முப்பது வருஷத்திற்குள் எவ்வளவு பயன் பெற்றிருக்கலாம்? இதை நாமனைவரும் உன்னிப் பார்த்தல் வேண்டும்.

இனியேனும் நம் நாட்டில் அநேகர் அவர்களுக்கு இருக்கும் உழவுத்தொழிலை மேற்கொண்டு அதை விருத்தி செய்து, தாங்களும் சீர்பெற்று ஏனையோரையும் சிறப்பிக்கச் செய்து இனிது வாழ வேண்டுகின்றோம். இதையே பரமகருணாநிதியும் அருள்புரிவாராக. நம் வேளாள மித்திரனும் அடிக்கடி இதைப்பற்றியே போதித்தும் வழி காட்டியும் தொண்டு புரிவதற்கே ஏற்பட்டுள்ளான். அவனையும் ஈசன் போற்றுவாராக.

C.R.N.

## மதிப்புரை.

இந்தியத் தாய்:—இதன் முதல் இதழ் வரப்பெற்றோம். இஃது ஓர் தேசீய தமிழ் மாதப் பத்திரிகை. இதனில் நம் நாட்டின் நலத்தையும் மக்களின் முன்னேற்றத்தையும் கருதி சிறந்த கட்டுரைகளுடன் வெளிவரும் இனிய மாத இதழ். இதனை மக்கள் அனைவரும் ஆதரித்தல் அவசியம். வருட சந்தா. ரூ. 1. வெளி நாடு ரூ. 1-4-0

விலாசம்: "இந்தியத் தாய்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

கலாநிதி:—இதன் சில இதழ்கள் வரப்பெற்றோம். இச்சஞ்சிகைக்கு விகிரேட்டர் திரு R. வைத்தியநாத சர்மா அவர்கள் ஆசிரியராக உள்ளார். இச்சஞ்சிகையில் வித்வான்களால் எழுதப்பட்ட சிறந்த வியாசங்கள் வெளியாகின்றன. தாய் மொழியில் பற்றுள்ள ஒவ்வொருவரும் இதனை ஆதரித்து ஆசிரியரை ஊக்கப்படுத்துவார்களாக.

வருட சந்தா: ரூ. 2. வெளி நாடு. ரூ. 2-8-0.

விலாசம் "கலாநிதி" ஆபீஸ்: தேத்தாங்குடி வடக்கு மசத்தி Po.
(Via.) வேதாரண்யம்.

# வாதவூரடிகள் வரலாறு.

## நரிபரியாக்கிய படலம்.

(A. வெங்கடாசல முதலியார்)

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதமாக பாசபந்தங்களை நீக்கிப் பரிசுத்தராயிருந்த மாணிக்கவாசக சுவாமிகளை பாண்டியராசன் மற்றை நாள் வரவழைத்து, ஏன் இன்னுங் குதிரைகள் வந்தில என, அவர், இன்று முதல் மூன்று நாளைக்குள் குதிரைகள் வந்துவிடும். அவைகள் நிற்றற்கு வேறு பெரிய கொட்டாரங்கள் கட்டுவிக்க; அவைகளுக்குத் தண்ணீரூட்ட வேறு குளங்கள தோண்டுவிக்க; பட்டணங்களெல்லாம் அலங்கரிப்பிக்க'' என்றார். அது கேட்டு பாண்டியனும் அவ்வண்ணமே ஏவலர்களிடம் உத்திரவு செய்தான். மாணிக்கவாசக சுவாமிகள் தாம் வரையறுத்துக் கூறின மூன்று தினங்களுங் கழிந்தன, பின்னும் பாண்டியன் "இன்னும் குதிரைகள் வரக்கண்டிலம்'' அவை வருவது என்றைக்கு" என்று, சில கொடியர்களை நோக்கி இந்தக் கள்வனைக் கொண்டுபோய் தண்டித்து நமது பொன் முழுதையும் வாங்குங்கள் எனக் கட்டளையிட்டான். உடனே தண்ட வீரர்கள் மாணிக்கவாசக சுவாமிகளை கயிறு கட்டி சூழ்ந்து கொண்டு சென்று "இனிப் பொன்னுக்கு வகையேது? சொல்லும்'' என்று சீறி, அவர் சிரசின்மேற் ஒரு பெரிய கல்லேற்றினார்கள். தமது மெய்யன்பர்களுடைய பாரங்களை யெல்லாந் தாங்கு பராகிய சோம சுந்தரக்கடவுள் அவர் மேலேற்றிய சுமையைத் தாங்கியருளினர். தமக்குப் பாரந் தோற்றாமல் தாம் நிற்கின்ற வெயிலிலே சிவபெருமானுடைய திருவடி நிழலாக நின்ற மாணிக்கவாசக சுவாமிகளுடைய நிலையைக் கண்ட வீரர்கள் "இதுவென்ன மாயம் போலும்" என்று சீற்றங் கொண்டு வாதவூரடிகளுடைய கைகளிலும் கால்களிலும் கிட்டி மாட்டி நெருக்கினார்கள். அவர் அந்தக் கொடுஞ் செய்கைக்கும் அஞ்சாமல் சிவத்தியானமா யிருந்தார். அப்பொழுது சூரியாஸ்தனமாயிற்று. சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருக்கிற வாதவூரடிகளை அன்றிரவு தண்ட வீரர்கள் இருண்மயமான சிறைக்கூட்டத்திலே விடுத்து விலங்கு மாட்டித் தண்டித்தார்கள். அவர் சிவபெருமானுடைய திருவடிக் கமலங்களைத் தெப்பமாகக் கொண்டு தமக்கு நேரிட்ட துன்பக் கடலைக் கடந்து, வைகறையிலே அடியார்கள் சொக்கலிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணியம்மையையும் திருப்பள்ளி யுணர்த்துதற்கு மங்கல சங்கத்தொனியும், வேத கோஷத்தையும் தமது திருச்செவி நிரம்பக் கேட்டுக் கொண்டிருக்க சூரியோதயமாயிற்று.



வாதவூரடிகள் சோமசுந்தரக்கடவுள் விளங்குகின்ற விமானத்தின் சிகரத்தைப் பார்த்து தமது கரங்களை சிரசின் மேற்குவித்து கண்களில் நீர் சோர நாதனைப்பாடலுற்றார்.

எந்தா யனைத்துலகு மீன்றாயெத் தேவர்க்கும்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவால வாயுறையுஞ்
சிந்தாமணியே சிறியேற் கிரங்காயோ.

மூவா முதலாய் முதுமறையா யம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கொடியா யடியேற் கிரங்காயோ.

முன்னை முது பொருட்கு முன்னை முதுபொருளாய்
பின்னும் புதுமைக்கும் பின்னுதும் பேரொளியாய்த்
தென்னு மதுரைத்திருவால வாயுறையும்
என்னு யகனே யெளியேற் கிரங்காயோ.

மண்ணாய்ப் புனலாய் கனலாய் வளியாகி
விண்ணா யிருசுடராய் இத்தனையும் வேறாகிப்
பண்ணா யிசையாய்ப் பலுவலா யெங்கண்ணும்
கண்ணானாய் என்னுறுகண் காணுவா றென்கொல்லோ

பொங்குஞ் சினமடங்கல் போன்றுருத்து வெங்கூற்றம்
அங்கும் புரியா வருந்துன்பத் தாழ்ந்துநான்
மங்குற் படியறிந்தும் வந்தஞ்ச லென்கிலையால்
எங்குஞ் செவியுடையாய் கேளாயோ என்

பூட்டி யருட்பாச மிருபாதம் பொறித்தடி
கூட்டி யடியாரு கைப்படுத்தாட் கொண்டரு
காட்டியவோ வின்றென்னைக் கைவிட்டாய் வெ
ஆட்டி யொருக்கு மிடத் தாரேன்று சொல்வாரோ.

22502

ஊரா ருனைச்சிரிப்பா ரோராவென் றன்னடிமைக்
காரா யடியே னயர்வே னஃதறிந்தும்
வாரா யரசன் றமரிழைக்கும் வன்கண்ணேய்
பாரா யுன்றன்மை யிதுவோ பரமேட்டி.

என்று இவ்வாறு துதிக்கின்றவருடைய அழுகை யொலி, கடவுளின் திருக்காதிலே இளங் குழந்தை அழுமோசை தாயார் செவியிற் புகுந்தது போலத்தமது திருச்செவியில் நுழைதலும், கூடற் கடவுள் திருவாதவூரடிகளை சிறையை விட்டு நீக்கத் திருவுளங் கொண்டு, திருநந்திதேவர் முதலான கணநாதர்களை அழைத்து, ஆவணி மூல நாள் வந்துவிட்டது, நாம் இன்றைக்குப் பாண்டியன் கோபங்கொள்ளாமுன் அவனுக்குள்ள குதிரைகள் கொண்டு போய் செலுத்த வேண்டும், ஆகையால் நீங்களெல்லீரும் காட்டிலிருக்கும் நரிகளை குதிரைகளாக்கி அக்குதிரைகளை நடாத்தும் வீரர்களாகி முன்னே செல்லுங்கள், நாமும் அவ்வாறு ஒரு குதிரை வீரனாய் வருகின்றோம் என்று விடை கொடுத்தருளினார். அக்கட்டளை யின்படி கணநாதர்கள், தேவர்களும் அதிசயிக்க காட்டிலுள்ள நரி களை குதிரைகளாக்கி அந்தக் குதிரைகளை நடத்துகின்ற பாகர்களாய் இடையிலே தூக்கிக் கட்டின செம்பட்டும் சரிகையாகிய பாகும், கால்களிலே பாதரக்ஷையும், மார்பிலே இருப்புக்கவசமும் கேடகமும் முதுகிலே அம்பறாத் தூணியும், கைகளிலே வில்லும் கூர்மை பொருந் திய வாளும், சினந்து பார்க்கின்றகண்களும், திரிபுண்டர மணிந்த நெற்றியும், இடிபோல் அதிர்ந்து முழங்குகின்ற சிறிப்பும், கொதித் துப் பொங்குகின்ற கோபமும் கொண்டவர்களாய் மேற்குத் திசையை நோக்கிச் சென்றார்கள். அந்தமிலழகராகிய சோம சுந்தரக்கடவு ளானவர், பிரவிக்கடலிலே முழ்கிக்கழிக்கிற சந்திரகுலத்தரசனாகிய பாண்டியனையும் காக்க, தருமார்த்த காம மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களும் நான்கு கால்களாகவும், ஞானகாண்டம கரும காண்டமென்கிற இரண்டு காதுகளாகவும், பரஞானம் அபரஞான மென்கிற இரண்டு கண்களாகவும், விதிமீய முகமாகவும், நிடேதமே வாலாகவும், ஆகமங்களே முதுகலங்காரமாகவும், மந்திரங்களே சதங் கை கிங்கிணிமாலைகளாகவும், சூரியனும் சந்திரனும் அங்க வடிவாக வும் தாரகப்பிரம மந்திரமே கடிவாளமாகவும், புறச்சமயங்களான சேனைகள் தோற்றோடும்படி செய்ய வல்லதாய் அண்டகோடிகளெல் லாம் அடங்கினதுபோல், முதுகின்மேல் உபநிடதமாகிய சேணிகொ



ண்டு, வேதமாகிய குதிரையின் மேல், காலிலே வீரக்கழலையணிந்து ஞானமாகிய வாளேந்தி, சாய்ந்த கொண்டையும், திருமுடிச்சாத்தும், கண்டிகையும், வாகுவலயமும், குண்டலமும்' திரிபுண்டரமணிந்த நெற்றியும், வெண்பட்டும், அடியார்கள் நெஞ்சை அகலாமல் அழகரி பவுட வெண்சாமரம் வீசவும், வெண் கொற்றக்குடை நிழற்றவும், வாத்தியங்கள முழங்கவும், ஆடவர்களும் பெண்களும் பலவாறு விய ந்து பேச, வேண்டிய வடிவங் கொள்பவராகி இந்திரசால விச்சை காட்டுவானென உலகை மயக்கி, மதுராபுரிக்கு அரைக்காத தூரத்தி லே, வாத்தியங்களின் முழக்கமும், குதிரைகளினொலியும், வீரர்களி னாரவாரமும், திசைகள் செவிடுபட வருகின்ற அவ்வீரர்களுக்கு நடுவே சென்றருளினார். இவ்விதமாகக் குதிரைகளின் வரவைக் கண்டவர்கள் விரைந்து சிறைச்சாலையிலிருக்கிற வாதவூரரிடத்திற் சென்று, "அரச நீதியிற்றவாத அமைச்சவர் சிங்கமே, கடல் பொங்கி வருவது போல குதிரை வெள்ளங்களெல்லாம், திரண்டு வருகின் றன, அவைகள் இப்பொழுது கோட்டை வாயிலில் வந்து விடும், ஆதலால் அரசனுக்குச் சொல்லும் என. திருவாதவூரர் பாண்டியனி டம் சென்று "மகாராஜனே, குதிரைகள் வருகின்றன" என்றார், அதைக் கேட்டு பாண்டியன் உடம்புபூரிக்க மனமகிழ்ந்து, விலைபெற்ற ரத்தினாபரணங்களும் பீதாம்பரங்களும் கொடுத்து மகிழ்வித்து, அரி யணையினின்றிழிந்து அமைச்சர் முதலாயினோர் சூழ கோட்டை வா யிலில் வந்து அங்குள்ள ஒரு மணிமண்டபத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்தான். சோமசுந்தரக்கடவுள், திருவிளையாட்டால் குதிரை களின் வரவை சிறிது நேரம் தாமதமாக்க பாண்டியன் வெள்கி, இது பொய்யென்று எண்ணிக் கோபங் கொண்டு, அரு கின்ற தண்டலாளர்களை சினந்து நோக்க அவர்கள் பாண்டியன் கருத்தின்படியே திரு வாதவூரரைக் கொண்டு போய் அஞ்சாமல் ஒறுத்தார்கள், மகாஞானியாகிய திரு வாதவூரர் சுந்தரபாண்டியனை கடவுளை துதிப்பாராயினர்.

பூவார் முளரிப் புத்தே ளறியா நெறிநின்றாய்
பாவார் தென்சொற் பனுவன் மாலைப் பணிகொண்டாய்
தேவா தேவர்க் கரசே சிறியே னுறுதுன்பம்
ஆவா வென்னு வஞ்சே லென்னு யறிவேனோ.

நெஞ்சே யுரைமெய் செயலை யெல்லா நினைவென்றாய்
வஞ்சே போனும் மன்னே தலின்று வாராயோ
பஞ்சே ரடியாள் பாகா கூடற் பரமேட்டி
அஞ்சே லென்றே யிதுவோ வருளுக் கழகையா.

காவி நேருங் கண்டா நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாக் கொண்டென் பணிகொண்டாய்
ஆவி யோடிவ் வுடலு நினதே யன்றோவின்
றாவி வாளா திருந்தால் யாரென் னுடையானே.

என்று இவ்வாறு துதிக்கின்ற ஆத்ம ஞானியான திருவாதவூரர் ஸ்தூல தேகத்தால் அடைய முடியாமல் எண்ணங்களாகிய குதிரைகளை மனமென்ற ரதத்தில் பூட்டி அதிவேகமாய்ப் பரமசிவனுடைய சமீபத்தை அடைந்தார். இளங்கன்றின் காதிலே தாய்ப்பசுவின் கனைகுரலோசை வந்து புகுந்தாற் போல, சின்னம், காளம், காகளம் முதலிய வாத்தியங்களின் ஒலியினையும், செந்தூள் திசைகளெல்லாம் மறைக்கவும் குதிரைகளின் வரவை அறிந்தார். தென்னவனும் குதிரைகளின் வரவை அறிந்து வாதவூரடிகளை வரவழைத்து, மிகுந்த அன்பு கொண்டு "நமது காரியங்களை உம்மைப்போல் நடத்த வல்லவர் யாவர்" என்று கூறி, அடங்காத மகிழ்ச்சி மேற்கொண்டு அவரோடு அளவளாவி யிருந்தான். அப்போது இருட்படலத்தைக் கிழித்துக் கொண்டு பல கிரணங்களுந் தோன்ற உதயமாகிற சூரியனைப் போன்று சிறந்த திருமேனி கொண்ட பாகர்களோடு மாயக்குதிரைகள் [illegible]. தன் பரிவாரும் கண்டறியாத அழகினையுடைய குதிரை[illegible] பாண்டியன் கண்டு "ஆயிரங் கண்களைப் பெற்றாலும் இவையைப் பார்க்க முடியாது" என்று மனக்களிப்போடு தானென்னுட சந்தோஷமென்றும் வேறு பாடில்லாமல் குதிரையின் மேல் வந்தவரை வியந்து, திருவாதவூரரை நோக்கி "இவருள் மிக்கார் யாவர்" என்று வினவினன். எல்லாந் தெரிய வல்லவராகிய திருவாதவூரர், "ஐயா நான் [illegible] அறியேன்" என்றார்.

(தொடரும்.)

220502

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |